# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 05 அதிர்வு 59 வைகாசி 2022 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Transco CARGO
We love to deliver

SHIPPING SCHEDULE

THE ONLY COMPANY WITH WEEKLY SHIPMENTS TO SRI LANKA

- Online Tracking
- SMS & Email arrival notice notification
- Live chat on Website
- Transco App

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| MAY 07 | JUN 14 |
| MAY 14* | JUN 21 |
| MAY 21 | JUN 28 |
| MAY 28* | JUL 05 |
| JUN 04 | JUL 12 |
| JUN 11* | JUL 19 |
| JUN 18 | JUL 26 |
| JUN 25* | AUG 02 |
| JUL 02 | AUG 09 |

1300 187 267
TranscoCargo.com.au
*Exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield


# பின்னை இட்ட தீ
# தென்னிலங்கையிலே...!




we make a special for you
Wedding Deco
Traditional wedding Deco
Engagement Deco
Puberty Ceremony Deco
Birthday Deco
Baby Shower Deco
and ets...

RK ROYAL EVENTS & DECORE

நீங்கள் விரும்பும் வடிவில் தருகிறோம்
திருமண அலங்காரம்
பாரம்பரிய திருமண அலங்காரம்
நிச்சயதார்த்த அலங்காரம்
பூப்புனித நீராட்டு விழா அலங்காரம்
பிறந்தநாள் அலங்காரம்
வளைகாப்பு அலங்காரம்
மற்றும் பல...

OUR SERVICE STATE
Victoria
Canberra

RATHEESH P
Event Coordinator and ets....
0452 428321
03 97002687
rkroyalevents@gmail.com
RKroyalevents&decore



EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
DANDENONG
நகை அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
Bala 0420 877 303
GOLD LOAN
Need some Emergency Fund
Don't worry we have got you covered!


ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம் 'டன்டினொங்' இல் புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


ISODIA TAX
ACCOUNTING AND TAX
QUALIFIED TAX AGENTS
TAX PRACTITIONERS BOARD REGISTERED
CHARTERED ACCOUNTANTS AUSTRALIA + NEW ZEALAND
வரி கணக்கை தாக்கல் செய்ய
$99
மட்டுமே
எங்கள் சேவைகள்
வருமான வரி தாக்கல்
வணிக வரி (BAS) தாக்கல்
வணிக எண்ணை (ABN) அமைத்தல்
சுயமாக நிர்வகிக்கப்படும் வருங்கால கருணைத்தொகை உதவி
(Setting up Self Managed Super Funds)
மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் !
03 8772 2557 | 0421 279 530 (DAN)
isodia.tax@gmail.com
THE HUB ARCADE, SUITE 4 SHOP 7 / 131 – 147 Walker St, Dandenong VIC 3175


PRAKAHS
GOLD BUYERS
தங்கம் ஈடு வைக்கும் நிலையம்
உங்கள் அவசரப்பணத்தேவைக்கு உடனடித் தீர்வு!
வட்டி விகிதம் 3%
தங்கம் வாங்கும் இடம்
டனிஸ்டன் 0421 279 530
127 Walker St, Dandenong, VIC-3175.
prakahsgold@gmail.com
www.prakahsgold.com
/PrakahsGold
MON- SAT 10 AM - 5:30 PM
CLOSED SUNDAYS AND PUBLIC HOLIDAYS



ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள 'கோட்டா கோகம' போராட்ட களத்துக்குள் ஆளுங்கட்சியினர் அத்துமீறி நுழைந்து, அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். கூடாரங்களை அகற்றி, சொத்துகளுக்கு சேதம் விளைவித்து, தீயிட்டுக் கொளுத்தி, இளைஞர்களை ஈவிரக்கமின்றி தாக்கினர். சம்பவ இடத்தில் பொலிஸார் மற்றும் கலகமடக்கும் பொலிஸார் இருந்தாலும், அதிகார வர்க்கத்துக்கு ஆலவட்டம் ஏந்தும் வகையிலேயே செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

# பேயிருந்த நாடு

**சுழியன்**

இலங்கையில் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு மத்தியில் பெரும் வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறியுள்ளன. பெருமளவு சொத்திழப்புகள் ஒருபுறம், மறுபுறத்தில் உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளன. இதனால் இலங்கை 'நெருக்கடி' பொறிக்குள் நன்றாகவே சிக்கிவிட்டது. இதிலிருந்து மீள்வதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை உறுதியாக ஊகிக்க முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகியதும், நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி ஓரளவாவது தீரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வன்முறை என்ற தீ மூலம், நாட்டை கொளுத்தி, நாசமாக்கிவிட்டே மஹிந்த நடையைக் கட்டியுள்ளார். 'பேய்களை ஆட்சிக் கதிரையில் அமர்தினால், அவை பிணங்களை ருசிக்கவே செய்யும்' என்ற உண்மையையும் உணர்த்திவிட்டே, பிரதமர் பதவிக்கு அவர் விடைகொடுத்துள்ளார்.

### கோட்டாகோகமவின் உதயமும் மக்கள் எழுச்சியும்

தாங்க முடியாத அளவுக்கு தொடர் விலையேற்றம், தலையிடியை ஏற்படுத்தும் விதத்தில் வரிசை யுகம், 10 மணிநேர மின்வெட்டு, ஊழல், மோசடிகள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் வக்கற்ற நிர்வாகத்தால் நாட்டு மக்களுக்கு பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள நேரிட்டது. இதனால் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தினர்.

மக்களின் இந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவும், ஜனநாயக மறுசீரமைப்புகளைக் கோரியும் ஏப்ரல் 09 ஆம் திகதி காலி முகத்திடலில், இளைஞர்களின் பங்களிப்புடன் தன்னெழுச்சி போராட்டம் ஆரம்பமானது. 'கோ ஹோம் கோட்டா' வசனமும் ஹிட்டானது. ஜனாதிபதி செயலகமும் முற்றுகையிடப்பட்டது. இந்தப்போராட்டத்துக்கு நாளுக்கு நாள் பேராதரவு வலுத்தது. பல தரப்பினரும் நேரில் களமிறங்கி நேசக்கரம் நீட்டினர். போராட்டக் களத்துக்கு 'கோட்டா கோகம' என பெயரும் சூட்டப்பட்டது. காலி உட்பட நாட்டில் ஏனைய சில இடங்களில் 'கோட்டாகோகம'வின் கிளைகள் உதயமாகின.

### மைனாகோகம

அதன்பின்னர் ஜனாதிபதியும், பிரதமர் உள்ளடங்கலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி அலரி மாளிகை முன்பாகவும் போராட்டக்களமொன்று உருவானது. அந்த வளாகத்துக்கு 'மைனாகோகம' என பெயர் சூட்டப்பட்டது. இவ்விரு போராட்டங்களிலும் பங்கேற்ற இளைஞர்கள், நிராயுதபாணியாக அறவழியிலேயே போராடினர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வன்முறையை தூண்டவில்லை. மாறாக இப்படியும் போராட முடியும் என புதிய போராட்ட அணுகுமுறையையும் உலகுக்கு கற்பித்தனர். ஏப்ரல் 09 ஆம் திகதி ஆரம்பமான தன்னெழுச்சி போராட்டம், மே 09 வரை மிகவும் அமைதியான முறையிலேயே முன்னெடுக்கப்பட்டது. மே 10 ஆம் திகதிதான் நிலைமை மாறியது - திட்டமிட்ட அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டது.

### நடந்தது என்ன?

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகுவாரென தகவல் வெளியானதையடுத்து, அவர் பதவி விலகக்கூடாதென வலியுறுத்தியும், அவருக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்பதை காண்பிக்கும் வகையிலும் அலரிமாளிகை முன்பாக மே 10 ஆம் திகதி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

### உசுப்பேற்றிய ஜோன்ஸ்டன்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளாட்சிமன்ற தலைவர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்துக்கு ஆதரவாளர்கள், பஸ்களில் அழைத்துவரப்பட்டு, அலரி மாளிகை முன்பாக குவிக்கப்பட்டனர். பின்னர் அலரி மாளிகையின் பிரதான மண்டபத்தில் வைத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆதரவாளர்களுக்காக உரையாற்றினார். அவரின் உரையும், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் உரையும் போராட்டக்காரர்களை வன்முறைக்கு தூண்டும் வகையிலேயே அமைந்திருந்தது.

மஹிந்த உரையாற்றிய பின்னர், அலரிமாளிகையில் இருந்து வெளியேறிய ஆதரவாளர்கள், அலரிமாளிகைக்கு முன்பாக அமைத்திருந்த 'மைனாகோகம' வை அடித்து நொறுக்கினர். கூடாரங்களை அகற்றினர். பொலிஸாரின் ஆதரவுடன்தான் தாக்குதல் நடத்தப்பட்டது என போராட்டக்காரர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது.

### கலவரமும் ஊரடங்கும்

அதன்பின்னர் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள 'கோட்டா கோகம' போராட்ட களத்துக்குள் ஆளுங்கட்சியினர் அத்துமீறி நுழைந்து, அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். கூடாரங்களை அகற்றி, சொத்துகளுக்கு சேதம் விளைவித்து, தீயிட்டுக் கொளுத்தி, இளைஞர்களை ஈவிரக்கமின்றி தாக்கினர். சம்பவ இடத்தில் பொலிஸார் மற்றும் கலகமடக்கும் பொலிஸார் இருந்தாலும், அதிகார வர்க்கத்துக்கு ஆலவட்டம் ஏந்தும் வகையிலேயே செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதை கண்டித்தும், அரசின் அராஜகத்துக்கு எதிராகவும் நாட்டில் பல பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்தன. நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

### ஓங்கியது போராட்டக்காரர்களின் கை

சம்பவம் இடம்பெற்று சில மணிநேரத்துக்கு பிறகு போராட்டக்காரர்களின் கை ஓங்கியது. மக்களும் அவர்களுக்கு ஆதரவாக குவிந்தனர். தாக்குதல் நடத்திய சில அரசியல் பிரமுகர்களும் வசமாக சிக்கினர். போராட்டக்காரர்களும், மக்களும் இணைந்து அவர்களுக்கு தக்க பதிலடி கொடுத்தனர். மண்டியிட வைத்தும், மரத்தில் கட்டி வைத்தும் மன்னிப்பு கோர வைக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன. அதேபோல கொழும்பு வந்த மொட்டு கட்சி ஆதரவாளர்கள், பஸ்களில் தமது வீடுகளை நோக்கி திரும்பும் வழியில், பிரதான நகரங்களில் வைத்து மக்கள் அவர்களை, சுற்றிவளைத்து சிறைபிடித்தனர். பஸ்கள் தாக்கப்பட்டதுடன், அரசியல் பிரமுகர்களுக்கும் தக்கபாடம் புகட்டப்பட்டது.

### விலகிய மஹிந்த

மக்கள் கொந்தளித்ததால் மஹிந்தவும் பதவி விலகல், கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார். ஆனாலும் மக்கள் கட்டுப்படவில்லை, அமைச்சர்களின் வீடுகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை தேடிச்சென்று, கடுமையாக தாக்கி அழித்து - தீயிட்டுக்கொளுத்தனர். இதனால் 10 ஆம் திகதி இரவு, நாட்டில் பல இடங்கள் பற்றி எரிந்ததை காணமுடிந்தது. சம்பவத்தின்போது பல அரசியல்வாதிகள் வீடுகளில் இருக்கவில்லை. அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பிச்சென்றுவிட்டனர்.

### ஆளும் கட்சி எம்.பியின் மரணம்: கொலையா? தற்கொலையா?

இந்தநிலையில், நிட்டம்புவையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவமானது, அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துகோரளவும், அவரின் மெய் பாதுகாவலரும் துப்பாக்கிச்சூட்டில் பலியாகினர். அவர்கள் தற்கொலை செய்தனர் எனவும், கொலையுண்டனர் எனவும் இருவேறு ஊகங்கள் நிலவுகின்றன. வீரக்கெட்டிய பகுதியிலும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகின. இவ்வாறு மேலும் பல வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றன.

### எரிக்கப்பட்ட பூர்வீக வீடு

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தி அவர்களை விரட்டாமல் இருந்து, மஹிந்த ராஜபக்ச கௌரவமாக பதவி விலகியிருந்தால் இலங்கையில் இன்று இந்நிலைமை ஏற்பட்டிருக்காது. நெருக்கடி தீர்ந்த பிறகு என்றாவது மஹிந்தவுக்கு அரசியலுக்கு வரக்கூடியதாக இருந்திருக்கும். ஆனால் வன்முறை என்ற அகோரிகளின் தேரை தெருவில் இழுத்துவிட்டே மஹிந்த விடைபெற்றுள்ளார். மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த மதிப்பும் சூனிய மட்டத்துக்கே வந்துவிட்டது. அதனால்தான் ராஜபக்சக்களின் பூர்வீக வீடுகூட கொளுத்தப்பட்டுள்ளது. வன்முறைக்கு வழிசமைத்துக்கொடுத்ததால் மஹிந்த கைது செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பல தரப்புகளாலும் விடுக்கப்பட்டுவருகின்றது.


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:05 அதிர்வு: 59 வைகாசி 2022 தொ.பே:1800 960 162

## ஒரேகுட்டை, ஒரே மட்டை!

அவுஸ்திரேலியாவின் தேர்தல் திருவிழா கோலகலமாக ஆரம்பித்து விட்டது. அரசியல்வாதிகள் பலரும் தேர்தல் பிரசாரத்துக்காக விதம் விதமான கடைகளை விரிக்கத் தொடங்கி விட்டனர். லிபரல்களும் லேபர்களும் அவுஸ் திரேலியாவிலுள்ள அனைத்துக்கோவில்களிலும் அங்கப் பிரதட்சணை செய்தும் எடுத்து வருகின்றனர். இப்படியே விட்டால் தமிழகத்தின் அரசியல் வாதியான எச்.ராஜா இங்கு வந்து இவர்களோடு சேர்ந்து கூட்டணி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கையில் தேர்தல் காலங்களில் இனவாதமும் இந்தியத் தேர்தல்களில் மதவாதமும் எவ்வாறு தலை விரித்தாடுமோ அவ்வாறு அவுஸ்திரேலியாவில் வழக்கம் போல அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகளின் விவகார மும் சூடு பிடித்துள்ளது.

இந்த விடயத்தில் போனமுறைமாதிரி அகதிகளுக்காக பச்சைக்கொடியை உயர்த்திப்பிடிக்காத லேபர்கட்சி, படகுகளில் வரும் அகதிகளை நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று உரத்து சொல்லியுள்ளது. ஆனால் படகு மூலம் அவுஸ்திரேலியா வருபவர்களை கடல் கடந்த தடுப்பு முகாம் கொள்கை – அகதிகளை மூன்றாவது நாடொன்றில் குடியமர்த்துதல்– பாதுகாப்பான சூழ்நிலை யின் கீழ் திருப்பி அனுப்புதல் ஆகியவற்றை நடைமுறைப் படுத்துவோம் என்று கூறிய லேபர் கட்சியின் தலைவர், தற்காலிக பாதுகாப்பு விசாவை நீக்கி விட்டு நிரந்தரப் பாதுகாப்பு விசாவை வழங்குவோம் என்று அறிவித்துள் ளார்.

இதேவேளை, மனிதாபிமான – மனித உரிமையை பேணும் நாடு என அவுஸ்திரேலியாவை கூறிக்கொண்டு அகதிகள் விடயத்தில் போலிவேடம் போடும் லிபரல்கள் அந்த நிலையை மாற்றவே இல்லை. “தற்காலிக பாதுகாப்பு விசாவை இல்லாதொழித்தால் ஆட்கடத்தல்காரர்களுக்கான வாய்ப்பாக அமைந்துவிடும்” என பிரதமர் மொறிசன் அகதிகள் மீதான வெறித்தன அரசியலை வெளிப்படுத்தி யுள்ளார். அகதிகள் வருவது என்பது ஆழிப்பேரலை வருதைப்போல அவுஸ்திரேலிய மக்களுக்கு ஒரு விரும் பத்தகாத விம்பத்தை உருவாக்குவதில் லிபரல்களுக்கு நிகர் லிபரல்களே.

அகதிகளுக்கெதிரன பிரசாரம்தான் லேபர்களை வீழ்த்தி லிபரல்களை மூன்று தடவைகள் ஆட்சி பீடமேற்றின. ஆகவே அகதிகள் விடயம் அவுஸ்திரேலிய அரசியலின் முக்கியபங்காற்றுகின்றது என்பது மறுக்க முடியாத விடயம். ஆனால் அகதிகள் விடயம் மனிதாபிமானத்துடன் தொடர்பு பட்டது இந்த விடயத்தில் லேபர்கட்சி தனது கரங்களை அகதிகளுக்காக நீட்டிதான் இருக்கின்றது.

சுமார் பத்து வருடங்களாக தற்காலிக பாதுகாப்பு விசாவில் இருப்பவர்களும் சரி, நாடுதாண்டிய கந்தகத் தீவுகளான நவ்று, பப்புவ போன்ற தீவுகளில் இருப்ப வர்களும் சரி உடல் நோய்வாய்ப்பட்ட நிலையிலும், ஹோட்டல்களின் அறைகளில் தடுத்து வைக்கப்பட்ட அகதிகள் அனைவருக்கும் அவுஸ்திரேலியா ஒரு திறந்த வெளிச்சிறைச்சாலையே. விடுவிக்கப்பட்டவர்கள்– விடுவிக் கப்படாதவர்கள் கூட அகதி என்ற காரணத்தால் சக மனிதர்களைப் போல வாழ முடியாமல் தான் அலை கின்றனர். கொரோனாவுக்கு முன்னரே அகதிகள் தனிமைப்படுத்தப்பட்டவர்களாக மற்றப்பட்டனர். உறவுகளை இணைக்க முடியாதளவுக்கு இறுக்கமான சட்டங்களை கொண்டுவரப்பட்டன.அதற்கு லேபர் கட்சியே வழி திறந்து விட்டது. அவர்கள் திறந்த வழிக்கு லிபரல் அரசு பூட்டைப் பூட்டி சாவியை கடலில் எறிந்து விட்டு அவ்வப்போது அகதிகள் விடயத்தில் முதலைக்கண்ணீர் வடிக்கும்.ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் இரண்டு கட்சிகளும். இதுதான் இதுவரைக்கும் அகதிக விடயத்துக் அவுஸ்தி ரேலியக் கட்சிகளின் நிலைப்பாடு.

பல்கலசார நாட்டில் அகதிகளுக்கெதிரான கோஷ ங்களை எழுப்பி வாக்குசேகரிக்கும் லிபரல்கள் பல்லின கலாசார கோயில்களில் காவடியெடுப்பது வாக்கரசியலுக் காக மட்டுமே.மாறாக எங்கள் மீதும், எங்கள் கலாசாரம் மீதும் கொண்ட பாசத்தினால் அல்ல.

# ராஜபக்சக்களை விரட்டும்வரை ஓயப்போவதில்லை!

மிகமோசமான பொருளாதார நெருக்கடியால் இலங்கை கொதிநிலையில் உள்ளது. அரசியல் நெருக்கடிகளும், அரசாங்கத்துக்கு எதிராக வும், ஜனாதிபதிக்கு எதிராகவும் மக்களின் போராட்டங்களும் பரவலாக வெடித்துள் ளன. இந்தப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க் கும் வகையிலும், இலங்கை மக்களுக்கு ஆதரவாகவும் புலம்பெயர் தேசங்களிலும் ஜனநாயகப் போராட்டங்கள் நடந்தேறி வருகின்றன. இந்தப் போராட்டங்களில் பெரும்பாலும் சிங்கள மக்களே கலந்துகொள்கின்றனர். இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஆஸ்திரேலியாவின் மெல் பேர்னில் இடம்பெற்றும் வரும், ராஜபக்ச குடும்பத்தை ஆட்சியில் இருந்து அகற்றக்கோரும் போராட்டங்களின் ஒருங்கிணைப்பாளரான தனுஷ்க பெர்னாண்டோ, ‘எதி ரொலிக்காக’ வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.



**நேர்கண்டவர்: ஜே ஜே**

**கேள்வி: இலங்கையில் நிலவும் நெருக்கடி தொடர்பில், அங்கு போராட்டங்கள் நடத்துவ தால் பயனுண்டு. ஆனால் புலம்பெயர் தேசங்க ளில் மேற்கொள்ளப்படும் இத்தகைய போராட் டங்கள் மூலம், நாட்டில் (இலங்கையில்) தாக் கத்தை ஏற்படுத்துமென நம்புகிறீர்களா?**

பதில்: இலங்கை வாழ் மக்களால் மேற்கொள்ளப் படும் போராட்டங்களுக்களுக்கு ஆதரவளிக்கும் வகை யிலேயே நாமும் போராடிவருகின்றோம். எம்மால் முன்னெடுக்கப்படும் நகர்வுகள், எமது இலங்கைச் சொந்தங் களுக்கு பலமாக அமையும் என கருதுகின்றோம்.

**கேள்வி: இப்படியான போராட்டங்கள் மூலம், ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பமுடியும் என நம்புகின்றீர்களா?**

பதில்: ஆம், நிச்சயமாக. புலம்பெயர் தேசங்கள் மற்றும் இலங்கையில் இடம்பெறும் தொடர் போராட்டங் களுக்கு இந்த அரசாங்கத்தால் ஈடுகொடுக்க முடியாது. எனவே, அவர்கள் கட்டாயம் பதவி விலகியே ஆக வேண்டும் அத்துடன், அரச பங்காளிக்கட்சிகள்கூட, போராட்டங்களால் பயந்து அரசாங்கத்துக்கு ஆதரவளிக் கப் பின்நிற்கின்றன. எனவே இந்த அரசாங்கத்தால் அதிக காலம் ஆட்சியில் நீடிக்க முடியாது.

**கேள்வி: ராஜபக்சக்களை வீட்டுக்கு விரட்டும் கோஷம் பரவலாக எழுப்பப்படுகின்றது. அவர் களை அனுப்பிய பிறகு, யாரிடம் ஆட்சியைக் கையளிக்கலாம் எனக் கருதுகின்றீர்கள். ராஜ பக்சக்கள் விட்ட தவறைச் சரிசெய்து, பொருளா தார நெருக்கடியைத் தீர்த்து, அரசியல் குழப்பங் களைக் களைந்து நாட்டை முன்னேற்றக் கூடிய ஒரு தலைவர் இப்போது இலங்கையில் உள் ளாரா?**

பதில்: எம்மிடம் பல தலைவர்கள் உள்ளனர். 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்தவுக்கு ஏற்ற வேட் பாளர் யாரென்ற வினா எழுந்தபோது, மைத்திரிபால சிறிசேன தக்க நேரத்தில் களமிறக்கப்பட்டார். மக்க ளால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுபோலவே ராஜபக்சக்கள் வீடு சென்றதும், புதிய தலைவர் வருவார். அந்த நம்பிக்கை எமக்குண்டு.

**கேள்வி: பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்கு, போராட்டங்களை கையில் எடுத்துள்ள நீங்கள்(புலம்பெயர்மக்கள்) ஏதேனும் திட்டங்களை வகுத்துள்ளீர்களா? அல்லது இப்போது ஏதும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளீர்களா?**

பதில்: ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்புவதே முதல் வேலை. அவர்கள் இருக்கும் வரை நாம் எதுவும் செய்யப்போவதில்லை. அவர்கள் வெளியேறியதும் நிச்சயமாக நாட்டை மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம். புலம்பெயர் மக்களால் எந்தளவுதூரம் முடியுமோ அந்தளவு உச்சப் பங்களிப்பை வழங்குவோம்.

**கேள்வி: மிகமோசமான பொருளாதார நெருக் கடியால் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை யாலேயே தற்போது மூவின மக்களும் தமக் கிடையே உள்ள வேற்றுமைகளை மறந்து, ஒன்றுசேர்ந்து போராடுகின்றனர். இந்த நிலை தொடர்ந்துப் நீடிக்குமா, இல்லையேல் பொரு ளாதார நெருக்கடிகள் கட்டுக்குள் வந்த பிறகு மீண்டும் இனவாதம் தலைதூக்குமா?**

பதில்: இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பது புதிய தலைமுறை. இந்த தலைமுறையினரை எவரும் அவ்வளவு இலகுவாக மூளைச்சலவை செய்ய முடி யாது. எமது தலைமுறையைப்போன்று உணர்சிவசப் பட்டு இனவிரோதத்தை அவர்கள் வளர்ப்பதில்லை. அவர்களின் சிந்தனையோட்டம் வேறு. ஆகவே இவ்வாறான பிரச்சினைகள் இனிமேல் உருவாகாது.

**கேள்வி: இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் இடம்பெறும் காணி அபகிரிப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற் றோரின் போராட்டங்கள் குறித்து உங்கள் பார்வை எவ்வாறுள்ளது?**

பதில்: இரண்டு பக்கங்களிலும் நிறைய இழப்புகள் ஏற்பட்டன. இத்தகைய இழப்புகளுக்கு தீர்வு கிடைக்க நீண்டகாலம் எடுக்கும். அதேவேளை இத்தகைய பிரச்சினைகளுக்கு நாட்டில் நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்றால், நல்லதோர் அரசாங்கம் அமைய வேண்டும்.அதற்காகவுமே நாம் போராடுகின்றோம்.

**கேள்வி: இலங்கை அரசாங்கத்துக்கும், ராஜபக்ச குடும்பத்துக்கும் எதிராக புலம்பெயர் தேசங்களில் தற்போது இடம்பெற்றுவரும் போராட்டங்களில் அதிகளவில் தமிழர்கள் பங்குகொள்வதில்லையே. அது ஏன் என எண்ணியதுண்டா?**

பதில்: புலம்பெயர் தமிழ்மக்களுக்கு, சிங்கள மக்கள்மீதும் இலங்கை அரசுமீதும் நம்பிக்கையில்லை. எனினும், அனைத்தையும் அவர்கள் அவதானித்தே வருகின்றனர். தற்போதைய சூழ்நிலையே சரியான தருணம், எனவே, இலங்கையர்களாக ஒன்றிணைந்து ராஜபக்சக்களை வெளியேற்ற குரல் கொடுக்க வேண்டும். இதற்காக தமிழர்களும் போராட்டங்களில் இணையவேண்டும்.

**கேள்வி: பல போராட்டங்கள் ஆரம்பத்தில் இப்படித் தான் எழுச்சியாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் நீண்ட காலமாகியும் தீர்வு கிடைக்கவில்லை என்பதால் சலிப்பு ஏற்பட்டு கைவிடப்பட்ட வரலாறுகள் நிறைய வுண்டு. ஒருவேளை ராஜபக்சக்கள் அவ்வளவு விரை வில் ஆட்சியை விட்டு போகாமல் அடம்பிடித்தால் அல்லது வேறு குறுக்குவழிகள், மாற்றுத்திட்டங்கள் மூலம் காலத்தை இழுத்தடித்தால் உங்களுக்கு சலிப்பு வராதா? போராட்டத்தை இடைநடுவில் கைவிடு வீர்களா?**

பதில்: இல்லை, ராஜபக்சக்களை விரட்டும்வரை இலங்கையில் நடைபெறும் போராட்டமும், இங்கு இடம்பெறும் போராட்டமும் ஓயாது. அது உறுதி.



# மேயில் விதைத்தவன் வீழ்வான்

● ஜெரா

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்றொரு தமிழ் முதுமொழியுண்டு. அதாவது நாம் என்ன காரியங்களைச் செய்கிறோமோ அதன் மறு விளைவு நிச்சயம் நமக்கு காலச் சுழற்சியில் வந்து சேரும் என்பதே இதன் அர்த்தமாகும். மிக அண்மைய காலத்தில் இந்தத் தமிழ் முதுமொழி அச்சொட்டாகப் பொருந்திப்போவது ராஜபக்ச குடும்பத்தினர்க்கே. அதிகார வெறியில் ராஜபக்ச குடும்பத்தினர் செய்த அத்தனை அட்டூழியங்களின் விளைவும் ஒரே நேர்கோட்டில் வந்துநிற்கிறது. அந்த நேர்கோடு அவர்களின் பல தலைமுறை அரசியலுக்கும் சாவுமணி அடித்துக் கொண்டிருக்கிறது.

1948 ஆம் ஆண்டு இலங்கையை ஆங்கிலேயர்கள் சிங்கள மக்களிடம் கையளிக்கும்போது, இத்தீவில் இனங்களை முதன்மைப்படுத்திய பிரச்சினைகளின் தொடக்கத்தை எதிர்கொண்டிருந்தது. சிங்களவர்கள் - முஸ்லிம்கள் என அந்த முரண்பாடு உருவாகியிருந்தது. இரு இனங்களுக்கு மிடையிலான பிரச்சினையைத் தீர்க்கும் மத்தியஸ்தத்தை தமிழர்கள் பல முறை வகித்தார்கள். அவ்வாறு தமிழர்கள் மத்தியஸ்தம் வகிக்குமளவுக்கு கல்வி, பொருளாதாரம், இதர பண்பாட்டு விடயங்களில் மேலோங்கியிருந்தனர். ஆங்கிலேயரிடமிருந்த அநேக உள்நாட்டு அதிகாரங்களைத் தம் கல்வியறிவினால் பெற்றிருந்தார்கள். இலங்கை சுதந்திரமடைந்தபோது, தமிழர்களின் இந்த வளர்ச்சி நிலைதான் சிங்களவர்களுக்குப் பிரச்சினையாக விருந்தது.

எனவேதான் இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா இந்தப் பிரச்சினையை இனவாதப் பூதத்தை வளர்த்தெடுத்துத் தீர்வுகாண முயற்சித்தார். அதன்படி தமிழர்களது மரபார்ந்த தாயக நிலப்பரப்பை சிதைக்கும்நோக்குடனான சிங்களக் குடியேற்றத்திட்டங்களை நாடு முழுவதிலும் மேற்கொண்டார். கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் முதற்கட்ட குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழர்களது வாழிடங்களுக்குள் மிகச் செறிவான அளவில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் தமிழர்கள் வாழவே முடியாத சூழல் உருவாக்கப்பட்டது. இதனால் தம் மரபார்ந்த தாயக நிலங்களை விட்டுத் தமிழர்கள் வெளியேறலாயினர்.

இவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அடுத்த ஆட்சியாளரான பண்டாரநாயக்கா, தனிச்சிங்களச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். சமநேரத்தில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளிக்கும் வேலைத்திட்டங்களும், தமிழர் வாழிடங்களுக்குள் பௌத்த விகாரைகளை அமைக்கும் வேலைத்திட்டங்களை விரைவுபடுத்தவும் அவர் பின்நிற்கவில்லை. மூவினங்கள் வாழும் நாட்டில், சிங்களம் மட்டுமே நிர்வாக மொழி என்கிற சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, தமிழர்கள் அதற்கு எதிராக ஜனாநாயக ரீதியில் போராடத் தொடங்கினர்.

இதற்கு அடுத்ததாக இலங்கையின் அரசியலதிகாரத்தைப் பெற்ற சிறிமாவோ பண்டாரநாயக்கா கல்வித் தரப்படுத்தல் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தினார். அதாவது இலங்கையில் உயர்கல்வி பெறுவோரின் தொகையில் தமிழர்களே அதிக இடம்பிடித்தனர். இதில் மட்டுப்படுத்தல்களை மேற்கொண்டு, தமிழர்கள் தம் திறமையால் பெற்றுவந்த உயர்கல்வி வாய்ப்பை இழக்கச்செய்யும் சதி மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சதியில் அதிகம் பாதிக்கப்பட்ட தமிழ் இளையோர், ஜன நாயக ரீதியில் போராடத்தலைப்பட்டனர் இவ்வகை ஜன நாயகப் போராட்டங்களை ஆயுதங்கொண்டு அடக்க அரசு முற்பட்டது. இதனால் கொதித்தெழுந்த தமிழ் இளைஞர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஆயுதமேந்தினர்.

தமிழ் இளையோர் தம்மையும், தமது இனத்தையும் பாதுகாத்துக்கொள்ள இலங்கையின் ஆயுதப்படைகளோடு மோதவேண்டிய சூழல் ஏற்பட்டது. அதன்படி 1983 ஆம் யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் இடம்பெற்ற தாக்குதலொன்றில் இராணுவத்தைச் சேர்ந்த 13 பேர் இறந்தார்கள்.

அதனைச் சாட்டாக வைத்து, கொழும்பு, கண்டி என இலங்கையின் தெற்குப் பாகத்தில் வாழ்ந்த, வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தமிழர்கள் மிக மோசமாக சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டார்கள். கொலை, கொள்ளை, சொத்தழிப்பு, உயிரழிப்பு என மிலேச்சத்தனமிக்க அரச பயங்கரவாதம் தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்டது.

இந்தக் கலவரத்தின் பின்னரான காலம் இலங்கையின் வரலாற்றில் இரத்தக்களரி மிகுந்ததாகவே காணப்பட்டது. இலங்கையில் இரு இனங்கள் மோதிக்கொள்வது, இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்னும் இராஜதந்திர நிலைப்பாட்டை உருவாக்கியது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எனும் உளப்பிறழ்வுடைய சிங்கள இனவாதியின் கையில் சிக்கிய இலங்கையை உலக நாடுகள் தமக்கு இசைந்தால்போல கையாள்வதற்கு மேலும் வசதியாகவும் இருந்தது. பூகோளப்போட்டியில் இலங்கை வசமாகச் சிக்கவைக்கப்பட்டது.

ஜே.ஆரைத் தொடர்ந்த நீடித்த ஆட்சிக்குழப்பங்களால் விரக்தியடைந்த சிங்கள மக்கள், தாம் இரும்புப் பெண் மணியாக நம்பிய சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை 10 வருடங்கள் ஆட்சிக்கதிரையில் இருத்திவைத்து வேடிக்கை பார்த்தனர். சந்திரிகாவும் தன் பங்குக்குத் தமிழர்கள் மீதான சிங்களவர்களின் இனவாதத்துக்கு எண்ணெய் வார்த்தார். தமிழர் தாயகப் பகுதிகள் மீதான பொருளாதாரத் தடைகள், நவாலி, மடு தேவாலயத் தாக்குதல்கள், நாகர்கோவில் பாடசாலை மீதான தாக்குதல் எனப் பொதுமக்கள் பாதுகாப்புக்கென போர் வலயத்தில் தவிர்க்கப்பட வேண்டிய அத்தனை இடங்களுக்கும் குண்டுத்தாக்குதல் நடத்தினார். 1995 யாழ்ப்பாண இடப்பெயர்வு என்ற மிகப்பெரிய மானுட அவலத்தை சந்திரிகா நடத்திமுடித்தார்.

தன்னால் எவ்வளவுக்கு முடியுமோ, அவ்வளவுக்கு இனவாதத்தையும், இன முரணையும் வளர்த்துவிட்டு, ஆட்சியை ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார் சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தனமிக்க இராஜதந்திர இனவாத நடவடிக்கைகளில் நம்பிக்கையற்ற சிங்கள மக்கள் தம்மை ஆட்சி செய்வதற்கு ஓர் இராஜபரம்பரை தேவையென வேண்டினர். அதாவது நவீன துட்டகாமினி ஒருவரைத் தேடினர். பௌத்த மகாசங்கங்கள், பௌத்த தீவிரவாத கட்சிகள், இயக்கங்கள் போன்றன இந்தத் தேடுதல் வேட்டையில் தீவிரமாகியிருந்தன. அதன்போது சிங்கள மக்களுக்கு கிடைத்த அரிய முத்தாக அப்போதைய மனித உரிமைப்போராளியான மஹிந்த ராஜபக்ச தெரிவானார். 2005 ஆம் ஆண்டில் இலங்கை நாட்டின் ஏக அதிகாரமுடைய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச ஆட்சிபீடமேறினார்.

இனவாதத்தை முதலீடாகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய மஹிந்த ராஜபக்ச வயது, பால் பாராது தன் முழுக்குடும்பத்தையும் அரசியலுக்குக் கொண்டுவந்தார். 100 வீத இனவாத விச ஊசியை சிங்கள மக்களுக்கு செலுத்தி வடக்கு, கிழக்கில் தமிழர்கள் மீதான போரை நடத்தினார். போர் வெறியில் வடக்கு, கிழக்கு பகுதியில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள், சித்திரவதைகள் உள்ளடங்கலான இனப்படுகொலை எவருடைய கண்களுக்கும் தெரியவில்லை. தமிழ் மக்கள் மீது தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டுகளை வீசி கொத்துக்கொத்தாகக் கொன்றொழித்தார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த தமிழர்களும் கடத்தப்பட்டார்கள். சுட்டுக்கொல்லப்பட்டார்கள். கப்பம்கோரல்களுக்குள்ளானார்கள். நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டார்கள்.

உலகமே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு காட்டுமிராண்டித்தனங்களை கட்டவிழ்த்த ராஜபக்சவினர் படைகள், 2009 மே மாதத்தில் போரை முடிவுக்குக் கொண்டுவந்தனர். போரின் முடிவில் சரணடைந்தவர்களை மிருகங்களை விடக் கேவலமாக நடத்தி திறந்தவெளிச் சிறைகளில் அடைத்தனர். சரணடைந்த போராளிகளை, மனிதவுரிமை செயற்பாட்டாளர்களைக் கடத்தினார்கள். அவர்களுக்கு என்ன நடந்ததென்று இன்றுவரையும் அரசு பதில் சொல்லவில்லை. இவ்வாறு இராணுவத்திடம் கையளித்த உறவுகளின் கண்ணீர் போராட்டம் இன்றும் வடக்கு,கிழக்குத் தெருக்களில் நடந்துகொண்டிருக்கிறது.

இவ்வளவு மிலேச்சத்தனமிக்க போரை தமிழர்கள் மீது நடத்தி ராஜபக்சக்கள் அதில் வெற்றிபெற்ற போதிலும், அவர்களின் இரத்த வெறி அடங்கவில்லை. தமிழர் தாயகப் பகுதியில் பௌத்த மயமாக்கம், இராணுவ மயமாக்கம், சிங்கள குடியேற்றம், சொத்துகள் அபகரிப்பு எனத் தமது பௌத்த சிங்கள காட்டுமிராண்டித் தனத்தைக் காட்டிக்கொண்டிருக்கின்றனர். இனவாதம் செழித்தோங்கி நிற்கும் இந்நிலையில்தான், இலங்கையைப் பொருளாதாரச் சரிவு மிகமோசமாகப் பாதித்திருக்கிறது. சிங்களவர்களின் அனைத்து வர்க்கத்தினரையும் இது தெருவுக்குக் கொண்டுவந்துவிட்டிருக்கிறது. உணவுக்கும், எரிபொருளுக்கும், மருந்துக்கும் தெருவில் நிற்கும் சிங்களவர்கள் தாம் இன்று எதிர்கொள்ளும் இந்நிலைமைக்கு யார் காரணமெனத் தேடும்போது, ராஜபக்சவினரின் மெய் முகத்தைக் கண்டுபிடித்துவிட்டனர். இனவாதச் சூறையை ஏற்படுத்தி நாட்டை மொத்தமாகக் கொள்ளையடித்த ராஜபக்சவினர் கொடுங்கோலர் என்ற நிலைப்பாட்டுக்கு சிங்கள மக்கள் வந்திருக்கின்றனர். 69 லட்சம் வாக்குளால் தாம் மட்டுமே தெரிவுசெய்த கோட்டாபாய ராஜபக்ச பிழையான தெரிவு என்கின்றனர். இந்தப் போராட்டங்களால் அதிர்ந்துபோன ராஜபக்சவினர், அதனைக் கட்டுப்படுத்தவும், தமது அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொள்ளவும், தம் குடும்பத்துக்குள்ளேயே மோதிக்கொள்ளத்தொடங்கி விட்டனர். ஒவ்வொரு ராஜபக்சவினரும், யாரின் தலையையாவது வீழ்த்தி தன் கதிரையைத் தக்கவைத்துக்கொள்ள வாளுடன் நிற்கின்றனர்.

2009 மே மாதத்தில் தமிழர்களைக் கொல்ல ஏந்தியிருந்த அதே வாள்களை, 13 வருடங்கள் கழிந்த மே மாதத்தில் தம் குடும்பத்தினருக்கு எதிராக ஏந்திக்கொண்டிருக்கின்றனர். தம் சொந்த மக்களுக்கு எதிராக வாளைத் தூக்கிப்பிடிததுக் கொண்டிருக்கின்றனர்.

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# சிங்கமொன்று அசிங்கமாகும் தருணமிது!



**ஆர்.சனத்**

இலங்கை அரசியலில் தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்தவர்தான் மஹிந்த ராஜபக்ச. அவரை துட்டகைமுனு மன்னனாகவும், தமது குடும்பத்தில் ஒருவராகவுமே பெரும்பாலான சிங்கள மக்கள் கருதினர். 'மாமன்னர்' எனவும் 'அப்பச்சி' என உரிமையுடன் அழைத்தும் வந்தனர். அதேபோல வாக்கு வேட்டை நடத்தி, அரியணையேறுவதற்கு மஹிந்தவின் 'ஒற்றைப்படமே' போதும் என்றளவுக்கு மக்கள் மத்தியில் அவரின் செல்வாக்கு கோலோச்சியிருந்தது.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த சிங்கள மக்கள்கூட, அலரிமாளிகையில் இருந்து மஹிந்த வெளியேறும்போது விழிநீர் வடித்தனர். மஹிந்தவை அவரது வீட்டுக்குத் தேடிச்சென்று ஆறுதல் கூறினர் - உற்சாகப்படுத்தினர். அரவணைத்தனர். அத்துடன் நின்றுவிடவில்லை, 2018 உள்ளாட்சித் தேர்தலில் அவர் தலைமை வகித்த கட்சிக்கு வாக்குகளை அள்ளிவழங்கினர். அதன்பின்னர் ஜனாதிபதித்தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் வரலாற்று வெற்றியை மஹிந்தவின் கட்சிக்கே(பொதுஜன பெரமுனவுக்கே) தங்கத் தட்டில் மக்கள் கொடுத்தனர்.

இவ்வாறு எல்லாவழிகளிலும் மஹிந்தவை ஆதரித்த - அவருக்கு நேசக்கரம் நீட்டிய - அவருக்காக குரல் கொடுத்த மக்களே, அவரை பதவியில் இருந்து விரட்டியடித்துள்ளமையானது, மஹிந்தவின் ஐந்து தசாப்தகால அரசியல் வாழ்வில் மீண்டெழமுடியாத பெரும் பின்னடைவாக - சரிவாகவே பார்க்கப்படுகின்றது.

கௌரவமாக வெளியேறிருக்க வேண்டிய அவர், நாட்டில் கலவரத்தை ஏற்படுத்திவிட்டு, படுகொலைக்கு மத்தியிலேயே பதவிக்கு விடைகொடுத்தார். இதனால் வரலாற்றில் இருள் சூழ்ந்த மனிதர்களுள் ஒருவராகவே அவர் இனிமேல் இடம்பிடிக்கபோகின்றார்.

தனது தந்தையின் மறைவின் பின்னர், 1970 நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக மஹிந்த ராஜபக்சவின் அரசியல் பயணம் ஆரம்பமானது. அந்தத்தேர்தலில் வெற்றிபெற்று, நாடாளுமன்றத்துக்கு இளம் வயதில் (25 வயதிலேயே) தெரிவானார்.

ஆயினும் 1977 பொதுத்தேர்தலில் தோல்வி அடைந்தார். அதன்பின்னர் எந்தவொரு நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் தோற்றது கிடையாது. 1994 ஆம் ஆண்டு முதல் மஹிந்த ராஜபக்ச அமைச்சுப் பதவிகளை வகித்தார். கட்சிக்குள்ளும் தனக்கான ஆதரவை பலப்படுத்திக்கொண்டார். 2004 ஆம் ஆண்டுதான் மஹிந்தவின் அரசியல் வாழ்வில் 'வசந்தகாலம்' எனலாம். 2004 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகா தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றதையடுத்து, மஹிந்த ராஜபக்ச பிரதமரானார். அவரை பிரதமராக்குவதற்கு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா விரும்பவில்லை. மைத்திரிபால சிறிசேன உட்பட மேலும் சில உறுப்பினர்களே அவரின் தேர்வுப் பட்டியலில் இருந்தனர். ஆனால் அவர்களோ தம்மைக் கட்சிக்குள் பலப்படுத்திக்கொள்ளவில்லை. இறுதியில் அதிர்ஷ்டமும், உட்கட்சி அழுத்தங்களும் கைகொடுக்க மஹிந்தவை பிரதமராக்கி , ஆட்சிக் கதிரையில் அமர்த்த வேண்டிய நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டது. மஹிந்தவை, பிரதமர் வேட்பாளராக களமிறக்கியது, தனது அரசியல் வாழ்வில் எடுத்த சில தவறான முடிவுகளில் பிரதானமானதாகும் என்பதை சந்திரிகா இன்று ஒப்புக்கொண்டுள்ளார்.

பிரதமரான கையோடு, ஜனாதிபதித் தேர்தல்தான் மஹிந்தவின் அடுத்த இலக்காக இருந்தது. அதற்கான வியூகங்களையும் அதிரடியாக வகுத்தார்.

மஹிந்தவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை வழங்குவதற்கும் சுதந்திரக்கட்சியின் தலைவராக இருந்த சந்திரிகா விரும்பவில்லை, ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக போட்டியிட வைப்பதற்கான வியூகங்களை அவர் வகுத்தார். தேசிய அரசு என்ற எண்ணக்கருவையும் உருவாக்கினார். ஆனால் அந்தத்தேர்தலில் வெற்றிபெற்றுவிடலாம் என ரணில் விக்கிரமசிங்க உறுதியாக நம்பியதால், சந்திரிகாவின் திட்டத்தை நிராகரித்தார். 2005 நவம்பர் 17 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தேக. வேட்பாளராக ரணில் களமிறங்கினார்.

## புலிகளால் அடித்த அதிர்ஷ்டம்

2005 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பை புறக்கணிக்குமாறு புலிகள் கோரிக்கை விடுத்தனர். புலிகளின் இந்த அறிவிப்புகூட மஹிந்தவுக்கே சாதகமாக அமைந்தது. வெற்றி வாய்ப்பு இருந்தும், புலிகளின் கோரிக்கையால் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 786 வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் மண்கவ்வினார். வடக்கு, கிழக்கு வாக்குகள் விழுந்திருந்தால் அவர் நிச்சயம் ஜனாதிபதி ஆகியிருப்பார்.

தன்னை வீழ்த்துவதற்காக மஹிந்த ராஜபக்ச புலிகளுடன் 'டீல்' ஏற்படுத்திக்கொண்டார் என்ற குற்றச்சாட்டை ரணில் இன்றளவிலும் முன்வைத்துவருகின்றார். சாணக்கியனுடன் சபையில் அண்மையில் ஏற்பட்ட சொற்போரின்போதுகூட இந்த விடயத்தை அவர் நினைவுபடுத்தியிருந்தார்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிக்கனியை ருசித்த கையோடு அரியணையேறிய மஹிந்த, முக்கிய பதவிகளுக்கு தனது சகாக்களை அதிரடியாக நியமித்தார். குறிப்பாக அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய தனது சகோதரர் கோட்டாபய ராஜபக்சவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியை வழங்கி அழகுபடுத்தி பார்த்தார். பஸிலிடமும் முக்கிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

மறுபுறத்தில் புலிகளுடன் சமரசப் பேச்சுகளுக்கும் தயாரானார். ஆனால், 2006 இல் மாவிலாறு சர்ச்சையோடு மீண்டும் உள்நாட்டுப் போர் மூண்டது. சர்வதேச நாடுகள் களமிறங்கியும் சாதகமாக எதுவும் நடைபெறவில்லை. இறுதியில் காட்டிக்கொடுப்பு, துரோகங்களுக்கு மத்தியில் 2009 மே 18 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது.

போர் வெற்றியானது சிங்கள், பௌத்த மக்கள் மத்தியில் மஹிந்தவை நாயகராக்கியதுடன், அரசியலில் அவரின் புகழையும் உச்சநிலைக்கு கொண்டுசென்றது.

பதவிக்காலம் முடிவதற்கு ஈராண்டுகள் எஞ்சியிருக்கையில், அரசியல் களம் தனக்கு சாதகமாக இருப்பதால் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளத் தயாரான மஹிந்த ராஜபக்ச, 2009 நவம்பர் 23 ஆம் திகதி தேர்தலுக்கான அழைப்பை விடுத்தார். 2010 ஜனவரி 26 ஆம் நாள் தேர்தலுக்கான திகதியாக நிர்ணயிக்கப்பட்டது.

இவ்வாறு திடீர் தேர்தல் அறிவிப்பாலும், களநிலைவரம் மஹிந்த தரப்புக்கு சாதகமாக இருந்ததாலும் ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி குழப்பநிலையிலேயே இருந்தது. எனினும், பல சவால்களுக்கு மத்தியில் அதிரடி வியூகம் வகுக்கப்பட்டு, இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத்தளபதியான சரத்பொன்சேகாவை பொதுவேட்பாளராக களமிறக்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டது.

சரத்பொன்சேகாவுக்கு ஆதரவாக ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன செயற்பட்டன. ஏனைய முக்கியமான தமிழ், முஸ்லிம் கட்சிகளும் புதிய ஜனநாயக முன்னணிக்கு நேசக்கரம் நீட்டின. ஆனால் இந்தத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ச வரலாற்று வெற்றியை பதிவுசெய்தார்.

## மஹிந்தவின் முதல் வீழ்ச்சி

2010 ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் மஹிந்த ராஜபக்ச ஏதேச்சதிகாரப் பயணத்தை ஆரம்பித்தார். தனக்கு தேவையானவற்றை செய்ய ஆரம்பித்தார். அமைச்சரவையின் எண்ணிக்கையும் வகைதொகையின்றி அதிகரிக்கப்பட்டது. அபிவிருத்தி என்ற போர்வையில் கட்டுப்பாடுகளின்றி கடன்கள் பெறப்பட்டன. அரசமைப்பின் 18 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக, ஜனநாயகத்துக்கு சட்டப்படி சமாதிகட்டி, சர்வாதிகாரத்துக்கு உயிர் கொடுத்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் உச்சம் தொட்டன.

போர் முடிவடைந்த பின்னர் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி, பொறுப்புக்கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்துவதில் அரசாங்கம் மந்த கதியில் பயணித்ததால் அனைத்துலக நாடுகளும் அவர் மீது கடும் அதிருப்தியடைந்தன. இராஜாதந்திர மட்டத்தில் அழுத்தங்களையும் பிரயோகித்தன.

இழுத்தடிப்புகள் தொடர்ந்ததால் 2012 ஆம் ஆண்டு முதல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தலைமையில் இலங்கைக்கு எதிராக தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், கொழும்புமீதான பிடியை சர்தேச சமூகம் மேலும் இறுக்கியது.மறுபுறத்தில் கடன்சுமை உட்பட மேலும் சில காரணங்களால் பொருளாதாரமும் ஆட்டம் கண்டது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பதவிக்காலம் முடிவடைவதற்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்த மஹிந்த திட்டம் தீட்டினார்.

## சந்திரிகாவின் ஆட்டம் - மண்டியிட்டார் மஹிந்த

எவரும் எதிர்பாராத வகையில் மஹிந்தவின் அமைச்சரவையில் இருந்த மைத்திரிபால சிறிசேனவே, மஹிந்தவுக்கு எதிராக பொது வேட்பாளராக எதிரணி சார்பில் களமிறங்கினார். இதற்கான காய்நகர்த்தல்களை சந்திரிகாவே திரைமறைவில் மேற்கொண்டார். இதனை மஹிந்தவை பழிதீர்ப்பதற்கான சந்தர்ப்பமாகவும் அவர் பயன்படுத்திக்கொண்டார். தேர்தலில் மைத்திரி வெற்றிபெற்றார். மைத்திரி - ரணில் தலைமையில் நல்லாட்சி மலர்ந்தது.

ஜனாதிபதித் தேர்தல் தோல்வியின் பின்னர் மஹிந்த அரசியலில் இருந்து ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் பொதுத்தேர்தலிலும் போட்டியிட்டார். தேசிய அரசில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இணைந்ததால் மஹிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவிகூட இல்லாமல்போனது. மஹிந்தவின் அரசியல் வாழ்வில் இது பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

பின்னர் 2018 ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சியின்போது மஹிந்த ராஜபக்ச, அரசமைப்புக்கு முரணாக பிரதமராக பதவியேற்றார். இதனால் பதவி விலக வேண்டி ஏற்பட்டது. இதற்கிடையில் பஸில் ராஜபக்ச ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சியை உருவாக்கினார். சுதந்திரக்கட்சியை கைவிட்டு, மஹிந்த அந்தக்கட்சியுடன் சங்கமித்தார்.

நல்லாட்சிக்குள் ஏற்பட்ட குழப்பம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் 2019 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தவின் ஆசியுடன் களமிறங்கிய கோட்டாபய ராஜபக்ச வெற்றிபெற்றார். மஹிந்த மறுபடியும் பிரதமரானார். 2020 பொதுத்தேர்தலில் போட்டியிட்டு, 5 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றார். இலங்கையில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற அரசியல்வாதி என்ற சாதனையையும் படைத்தார்.

கோட்டாவும், மஹிந்தவும் இணைந்து இலங்கையை சிங்கப்பூராக மாற்றுவார்கள் என பலரும் நம்பினர். முழு ஆதரவையும் வழங்கினர். 20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேறுவதையும் அனுமதித்தனர். ஆனால் இவ்விருவரினதும் வக்கற்ற ஆட்சியால் இலங்கை வரலாறு காணாத வகையிலான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டன. இதனால் மக்கள் மீளமுடியாத வகையில் வாழ்க்கைச் செலவு பொறிமுறைக்குள் சிக்கினர்.

நிலைமை மேலும் மோசமடைந்து, வரிசை யுகம் உருவானதால் நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக மட்டுமல்ல ஒட்டுமொத்த ராஜபக்சக்களுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்தனர். இதனால் சமல் ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, சஷீந்ர ராஜபக்ச ஆகியோருக்கு அமைச்சு பதவிகளை துறக்க வேண்டி ஏற்பட்டது. புதிய அமைச்சரவையில்கூட அவர்கள் எவ்வித பதவியையும் ஏற்கவில்லை.

மக்கள் கோரிக்கையை ஏற்று பதவி விலக ஜனாதிபதி கோட்டா மறுத்துவிட்டதால் அரசியல் நெருக்கடியும் உச்சம் தொட்டது. இதனால் குறைந்தபட்சம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவாவது வீடு செல்ல வேண்டும் என மகாநாயக்க தேரர்கள்கூட வலியுறுத்தினர். இதற்கிடையில் ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை என்பவற்றுக்கு முன்பாக மக்கள் போராட்டத்திலும் இறங்கியுள்ளனர். இந்நிலையிலேயே மஹிந்த ராஜபக்ச பதவி துறந்துள்ளார்.

அரசியலில் அத்தனை வித்தைகளும் மஹிந்தவுக்கு கைவந்த கலை. எனவே, நாமலை பிரதமராக்கி, அவருக்கு சிறந்த அரசியல் எதிர்காலத்தை அமைத்துக்கொடுத்துவிட்டு, 2023 இல் மஹிந்த அரசியலில் இருந்து ஓய்வு பெறவே திட்டமிட்டிருந்தார். என்ன செய்வது, கர்மவினை, முன்கூட்டியே பதவி துறந்து வீட செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எந்த மாதத்தில் போரை முடித்துவிட்டோம் என பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து கொண்டாடினார்களோ, அதே மாதத்தில் அரசியல் திண்டாட்டங்களுக்கு மத்தியில் விடைபெற்றுள்ளார் மஹிந்த. அவரின் பதவி விலகலைக்கூட மக்கள் பெரும் பட்டாசு கொளுத்தி கொண்டாடினர்.

# ஒடுக்கப்பட்டோருக்காக என்றைக்கும் குரல் கொடுப்பேன்!

## – அரன் மயில்வாகனம்




எதிர்வரும் 21 ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் 47 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் செனட் சபைக்கு விக்டோரியன் சோசலிஸக் கட்சியின் பிரதான வேட்பாளராக அரன் மயில்வாகனம் என்ற ஈழத்தமிழரும் போட்டியிடுகின்றார். இலங்கையில் யாழ்ப்பாணம் நாகர்கோயிலைச் சேர்ந்த அரன், அடக்குமுறைகளுக்கு எதிராகவும், அகதிகளுக்கு ஆதரவாகவும் பல ஆண்டுகளாகக் குரல் கொடுத்துக் கொண்டு வருபவர். போரின் நேரடித் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, பல கட்ட நெருக்கடிகளுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவில் அகதியாகத் தஞ்சமடைந்தவர். நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் அவர் எதிரொலிக்காக வழங்கிய செவ்வி இது.

**கேள்வி: இலங்கை முதல் ஆஸ்திரேலியா வரை நீண்ட உங்கள் நெடிய பயணம் பற்றி...?**

*பதில்: நான் தமிழீழத்தில் நாகர்கோயில் என்ற கிராமத்தில் பேரினவாதம் தலைவிரித்தாடிய காலகட்டமான 1983 இல் பிறந்தேன். இந்திய இராணுவத்தின் கொடூரங்கள் அனைத்தையும் அனுபவித்து நாகர்கோயில் பாடசாலை மாணவர்கள் மீதான குண்டுத்தாக்குதலில் உடன்பிறந்த சகோதரர் மற்றும் உறவுகளை இழந்து, பல இடம்பெயர்வுகளைச் சந்தித்து ஒரு கட்டத்தில் உயிருக்கு ஆபத்தான நிலையில், 1997 ஆம் ஆண்டு எனது 13 ஆவது வயதில் தனியாக அவுஸ்திரேலியா வந்தடைந்தேன். இளம் வயதில் போரின் கொடுமையால் உயிராபத்தான நிலையில் பாதுகாப்பு கோரி வந்த சிறுவனான என்னை அவுஸ்திரேலியா அரசாங்கம் மிகவும் மோசமான முறையில் நடத்தியதோடு தடுப்பில் வைத்து மேலும் பல இன்னல்களுக்கு ஆளாக்கியது. எனது புகலிடக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு மூன்றரை ஆண்டுகளுக்கு பின்னர் பல சமூக அமைப்புக்களின் ஆதரவோடு எனது பெற்றோர்கள் இங்கு வரவழைக்கப்பட்டனர். இளம் வயதில் எனக்கு ஏற்பட்ட கொடும் அனுபவம், அவுஸ்திரேலியா போன்ற நாட்டின் படிப்பினைகள் என்னை மக்களை நோக்கி நகர்த்தியது. என்னைப்போன்று இன்னல்களை, ஒடுக்குமுறைகளை அன்றாடம் சந்திக்கும் மக்களுக்காக, அந்த மக்களுடன் நிற்க வேண்டும் என்ற சமூகப் பார்வையைத் தந்தது. அதன் தொடர்ச்சியாக 2008 ஆம் ஆண்டு தமிழர் ஒருங்கிணைப்பு குழவில் செயற்பட்டுக்கொண்டிருந்த சபேசன் அண்ணாவின் அறிமுகத்தால் அகதிகள், பூர்வகுடி மக்கள், பெண்கள், தொழிலாளர்கள் நடத்தும் போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தேன். சமூகத்தைப் பற்றிய தேடலில் அகதிகள் மட்டுமல்ல இங்கிருக்கும் அனைத்து உழைக்கும் மக்களும் இனத்தின், மொழியின், பாலினத்தின் பெயரால் இந்த முதலாளித்துவ அமைப்பு முறையால் ஒடுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அதற்கு ஒரேயொருமாற்று உழைக்கும் மக்களுக்கான பொதுவுடைமை அரசியல்தான் என்பதையும் அறிந்து கொண்டேன். அன்று தொடங்கிய பயணத்தின் தொடர்ச்சியாக இன்று எம் மக்களின் குரலை பிரதிபலிக்க தேர்தலில் பங்கேற்கிறேன்.*

**கேள்வி: அரசியல் என்பது மக்களுக்கான உயரிய பொதுச்சேவை. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அது ஒரு வியாபாரமாகவும் சமூக அந்தஸ்துக்கான குறுக்கு வழியாகவும் மாறியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

*பதில்: என்னைப் பொறுத்தவரை தனிமனிதனாகவும், சமூகமாகவும் அரசியல் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. வரலாற்றின் எல்லாக் காலகட்டங்களிலும் அரசியலும் அதன் தன்மையும் பல போக்குகளை உள்வாங்கியே வருகின்றது. இன்றைக்கு பெரும்பான்மையான நாடுகளில் மக்கள் எதிர்கொள்வது, உழைக்கும் மக்களின் நலன்களைக் கருத்திற்கொள்ளாது பணக்காரர்களின், ஆதிக்கவர்க்கத்தின் நலன்களைப் பேணும் சுயநல அரசியலையே. ஆனால் இதே சமூகத்தில் காலங்காலமாகச் சாமானிய மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் அரசியலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உதாரணமாக அவுஸ்திரேலியாவில்கூட அகதிகளுக்காக, பூர்வகுடி மக்களுக்காக, கால நிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதற்காக, பெண்களுக்காக களத்தில் பல அரசியல் கட்சிகள் போராடி வருகின்றன. அவ்வாறு உழைக்கும் மக்கள் அரசியலை முன் நிறுத்துபவை விக்டோரியன் சோசலிஸக் கட்சி போன்ற பொதுவுடைமை கட்சிகளே.*

**கேள்வி: நீங்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் விக்டோரியன் சோசலிஸகட்சி மிக அண்மையில் தானே ஒரு அரசியல் கட்சியாக தோற்றம் பெற்றது?**

*பதில்: ஆம். ஆனாலும் விக்டோரியன் சோஸலிசக் கட்சி 2018 இல் கட்சியாக உருவெடுத்து இருந்தாலும் அதை தோற்றுவித்த தோழர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக களத்தில் சாமானிய மக்களோடு, அவர்களது உரிமைப் போரட்டங்களில் தோளோடு தோள் நின்றவர்கள், நிற்பவர்கள். சுருங்கச் சொன்னால் உழைப்பாலே இந்த உலகம் இயங்குகிறது. அத்தகைய உழைக்கும் மக்களை, அவர்களுக்கான அரசியலை முன் எடுத்துச் செல்லும் பொதுவுடைமை அமைப்பே இந்தக்கட்சி.*

**கேள்வி: உங்கள் கட்சியின் முக்கியமான நோக்கங்கள் எவையெனச் சொல்லுவீர்கள்.?**

*பதில்: அத்தியவசியமான துறைகள் அரசுடைமையாக்கப்படுவதோடு கல்வி, சுகாதாரம், போக்குவரத்து இலவசமாக்கப்பட வேண்டும்.*

*அடிப்படைச்சம்பளம் 30 டொலராக மாற்றப்பட வேண்டும்.*

*அகதிகளுக்குச் சம உரிமை, நிரந்தரமாக வசிக்கும் உரிமை, குடும்பத்தோடு இணைந்து வாழும் உரிமைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.*

*கால நிலை மாற்றத்துக்கான சரியான தீர்வு வேண்டும்.*

*இவைதான் எமது கட்சியின் கோரிக்கைகளாக உள்ளன.*

**கேள்வி: அகதிகள் விடயத்தில் கிறின் கட்சி எப்போதும் பச்சைக் கொடி காட்டிக்கொண்டு தானே இருக்கிறது. அதேவேளை மக்கள் மத்தியில் அந்தக் கட்சிக்கு நல்லபெயருமுண்டு . அப்படியிருக்கும் போது ஏன் சோசலிஸக் கட்சி...?**

*பதில்: மக்களுக்கு முழுமையான தீர்வு வேண்டும். மக்களின் பிரச்சினைகளை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். நான் 2002 முதல் 2009 ஆம் ஆண்டு வரை லேபர் கட்சியின் உறுப்பினர். 2009 ஆம் ஆண்டு லேபர்கட்சி ஈழத்தமிழர்களுக்குச் செய்த துரோகத்தின் பின்னரே நான் அந்தக்கட்சியிலிருந்து வெளியேறினேன். அதேவேளை கிறின் கட்சியிலும் குறுகிய காலம் செயற்பட்டேன். 2010 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் அமைப்புகள் பல கிறின் கட்சிக்கே ஆதரவு தெரிவித்திருந்தன. கிறின் கட்சியின் ஆதரவுடனேயே லேபர் ஆட்சிக்கட்டில் ஏறியது. மீண்டும் அதிகாரத்துக்கு வந்த லேபர் கட்சி (2010 முதல் 2013 ) லிபரல் கட்சியின் அரசியலையே கையில் எடுத்தது. இந்தக் காலப்பகுதியில் அகதிகள் பலர் நீண்டகால தடுப்புக்குள் சிக்கிக்கொண்டனர் நாடுகடத்தப்பட்டனர். சோசலிஸ்ட்கள் தேர்தலில் போட்டியிடுவது நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறவல்ல, மாறாக அதே நாடாளுமன்றத்தில் மக்கள் விரோத போக்குகளுக்கு எதிராகப் பலத்த குரலை எழுப்பவும், போராடும் மக்களைப் பலப்படுத்தவும், அவர்களோடு துணை நிற்கவுமே. இன்றுவரையும் இந்தப் பெரிய கட்சிகள் மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபடும் போது அதனைச் சுட்டிக்காட்டக்கூடியவர்கள் சோசலிஸக் கட்சியினரே. லேபரோ, கிறினோ இந்த அமைப்புக்குள்ளேயே நிற்கும் அதாவது முதலாளித்துவ அமைப்புக்குள்ளேயே சுழன்றுகொண்டிருப்பவை. எங்களைப் பொறுத்தவரை சோசலிஸக்கட்சியின் குரல் நாடாளுமன்றத்துக்குள் இருக்கும் போதே பெரும்பான்மை கட்சிகளை எதிர்த்து கேள்வி கேட்க முடியும்.*

**கேள்வி: இலங்கை, இந்தியாவைப் போன்று தானே இங்கும் லேபர், லிபரல் என்ற இரு கட்சிகளின் ஆதிக்கம் நிலவுகின்றது. இந்தக்கட்சிகள் எவ்வாறு இந்த ஆதிக்க நிலையை அடைந்தன? அதற்காக மக்களை அவை ஏமாற்றுகின்றன என்று அர்த்தம் கொள்ளலாமா?**

*பதில்: லிபரல் கட்சி மக்கள் நலன் சார்ந்த கட்சி கிடையாது. முதலாளிகளின் விருப்பங்களை நிறைவேற்றும் கட்சி. அந்தக் கட்சி ஆட்சியிலிருந்து தூக்கியெறியப்படவேண்டும். அதேவேளை, இதற்கான மாற்றுக்கட்சி லேபர் கட்சி கிடையாது. அவுஸ்திரேலியாவில் இருக்கும் 47 பில்லியனர்களிடம் அடிமட்டத்தில் இருக்கும் 7.7 மில்லியன் மக்களிடம் இருக்குமளவு சொத்து குவிந்துகிடக்கிறது. மாறி மாறி ஆட்சி அதிகாரத்துக்கு வந்த இரு கட்சிகளும் பணக்காரர்களை மேலும் பணக்காரர்கள் ஆக்கவும், அவர்களின் நலன்களை பாதுகாக்கவும் இயங்கியதேயொழிய சாமானிய மக்களின் நலன்களில் அக்கறை கொள்ளவில்லை. மாறாக அந்தமக்களைப் பல இன்னல்களுக்கு, ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கி வருகிறது. தொழிற்சங்களுக்கு எதிரான சட்டங்களை இரண்டு கட்சிகளும் வகுத்துள்ளன. கடந்த இருபது வருடங்களில் உண்மையான சம்பள அதிகரிப்பு என்பது இன்னும் பின்னுக்குத் தான் உள்ளது. அது மட்டுமின்றி காலநிலை மாற்றத்தால் ஏற்படும் விபத்துக்களால் ஆஸ்திரேலியாவில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாவுகள் ஏற்படுகின்றன. மருத்துவம், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, என்று எல்லாவற்றிலும் மக்கள் உரிமைகளை இழந்து அந்நியமாக்கப்பட்டு வருகின்றனர். நாட்டின் நிலை இவ்வாறிருக்க பிரதமர் மொறிசனோ, நீர்மூழ்கிக் கப்பல் வாங்க 200 பில்லியன் டொலரை ஒதுக்கியுள்ளார். இவை எல்லம் உணர்த்துவதும் இந்தக் கட்சிகள் எக்காலத்திலும் மக்களுக்கானவை இல்லை என்பதையே!*

**கேள்வி: தமிழர்கள் உங்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?**

*பதில்: இலங்கையில் இனப்படுகொலை நடந்த காலகட்டத்திலும், போருக்கு பிறகான காலகட்டத்திலும் தமிழ் மக்களின் அத்தனை போராட்டங்களிலும், உரிமை கோரல்களிலும் அந்தமக்களோடு துணை நின்றவர்கள் இங்கு இருக்கும் சோசலிஸ்டுக்கள்தான். அகதிகள் சார்ந்த பிரச்சினைகள், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கை, இனப்படுகொலை அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் என்று தொடர்ந்து தமிழ் மக்களோடு நிற்கும் முக்கியமாக உழைக்கும் மக்களோடு நிற்கும் ஒரு கட்சியின் பிரதிநிதியாக, தமிழ் மக்களின் குரலாக நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன். நமது குரல் ஒங்கி ஒலிக்க இது ஒரு சந்தர்ப்பம். அதனால் தமிழ் மக்களின் ஆதரவைவேண்டி நிற்கின்றோம்.*

# பசுபிக் டிராகன்

ஆஸ்திரேலியாவின் வரலாற்றை மேலோட்டமாக அறிந்தவர்களுக்கு இங்கிலாந்தைச் சேர்ந்த கேப்டன் குக் தான் முதன் முதலின் ஆஸ்திரேலியாவில் கால் பதித்தார், இந்த நிலத்தை பிரித்தானிய பேரரசின் ஒரு பகுதியாக அறிவித்தார் என்பது தெரிந்திருக்கும். ஆனால் ஆஸியை முதன் முதலில் கண்டு பிடித்தவர் அவர் அல்ல. அதற்கும் முன் பலரும் ஆஸி நிலப்பரப்பை அறிந்திருக்கிறார்கள் ஆனால் பல்வேறு காரணங்களால் முழுதும் அதைக் கையகப்படுத்த முடியாமல் விட்டுச்சென்றிருக்கிறார்கள்.

கேப்டன் குக் ஆஸ்திரேலியாவை கண்டுபிடிக்க இரண்டு வருடங்களுக்கு முன்னரே பிரெஞ்சுக் கடற்படை அதிகாரியான போகன்வில் ஆஸி நிலப்பகுதிக்கு மிக அருகில் வந்திருக்கிறார். அது கடற்பாறைகள் அதிகம் உள்ள பகுதியாதலால் அங்கு தரையிறங்க முடியாமல் போனது. இவர் தான் இன்று நாம் வனவாட்டு என்று குறிப்பிடும் தீவைக் கண்டுபிடித்து அதைப் பிரெஞ்சு அரசின் காலனியாக அறிவித்தவர். ஒருவேளை இவர் ஆஸ்திரேலியாவில் கால் பதித்து அதனை பிரெஞ்சு பிரதேசமாக அறிவித்திருந்தால் இன்றைய ஆஸியின் நிலை எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பார்க்கிறேன். நாம் பேசும் மொழி, உணவு, உடை, சர்வதேச உறவுகள், சட்ட அமைப்பு என்று அனைத்துமே வேறு மாதிரி இருந்திருக்கும். ஒரு மயிரிழையில் வரலாறு முற்றிலும் வேறு மாதிரி மாறியிருக்கும்.



கார்த்திக்வேலு

இது போன்ற ஒன்றுதான் இன்று சாலமன் தீவுகளில் நடந்துள்ளது. சாலமன் தீவுகள் சீனாவுடன் இரகசியப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திட்டுள்ளது. இது பசுபிக் நாடுகளின் புவி அரசியலில் பெரிய அதிர்வுகளை உருவாக்கியுள்ளது. குறிப்பாக ஆஸ்திரேலியாவில். இந்த அறிவிப்பு பசுபிக் பகுதியில் சீனாவின் செல்வாக்கை மேலும் உறுதி செய்திருக்கிறது.

சீனா தன்னை ஆசியாவில் வல்லரசாக நிறுவிக்கொள்ள முயல்வதை எல்லா நாடுகளுமே உணர்ந்துள்ளன. சமீப காலங்களில் இந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் சீனாவின் வெளியுறவு கொள்கைகள் அனைத்துமே இருந்து வந்துள்ளன. இதை கடன் வலை ராஜதந்திரம் (Debt Diplomacy) என்று பலரும் குறிப்பிடுகின்றனர். அதாவது சிறிய நாடுகளுக்கு பொருளாதார ரீதியாக வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு பெரும் கட்டுமானத்திட்டங்களை உவந்து வந்து செய்துகொடுப்பது, அதற்கான கடனையும் சீனாவே அளிக்கும்.

இவ்வாறான கட்டுமானங்கள் நடக்கும் வரை உள்நாட்டில் சிறிய அளவில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். ஆனால் அந்தத் திட்டம் முடிந்த பின்னர் அதனால் கிடைக்கும் என்று உத்தேசித்த வருவாய் ஏதும் வந்திருக்காது. சில சமயம் அந்தக் கட்டுமானங்களை பராமரிக்கும் அளவுக்கு கூட அந்த நாடுகளுக்கு பொருளாதார வசதி இருக்காது. அதன் பின் வாங்கிய கடனுக்கான வட்டியை அந்த நாட்டினால் கட்ட முடியாமல், அந்தக் கட்டுமானங்களை மீண்டும் சீனாவுக்கு நீண்ட கால ஒப்பந்தத்துக்கு கையெழுத்திட்டு அளிக்கும் நிலை வந்துவிடும். இலங்கையில் சீனா உருவாக்கிய அம்பாந்தோட்டை துறைமுகம் மீண்டும் சீனாவின் கைகளுக்கே போனதை ஒரு நல்ல உதாரணமாக சொல்லலாம்.

இலங்கை என்றில்லை, உலகின் பல்வேறு நாடுகளில் சீனா இது போன்ற ஒரு வெளியுறவு அணுகுமுறையை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறது. அதிகாரபூர்வமாக மட்டுமே 385 பில்லியன் டொலருக்கு மேல் சீனா இது போன்ற கடன்களை பல்வேறு நாடுகளுக்கு வழங்கியுள்ளது. கடன் அளிப்பதோ, வாங்குவதோ தவறில்லை. ஆனால் ஒரு அளவுக்கு மேல் இப்படி ஒரு நாட்டிடம் கடன் வாங்கும்போது இயல்பாகவே அது மறைமுகமாக அவர்கள் செல்வாக்கைச் செலுத்தும் நிலைக்கு இட்டுச்செல்கிறது.

சில சிறிய நாடுகள் தங்கள் GDP யில் கணிசமாக சதவிகிதத்தை சீனாவிடம் கடனாகப் பெற்றுள்ளன. கொங்கோ, டிஜிபொட்டி, கினியா போன்ற நாடுகள் கிட்டத்த 50% மேல் இவ்வாறு கடன் பெற்றிருப்பவை.

> **சீனா தன்னை ஆசியாவில் வல்லரசாக நிறுவிக்கொள்ள முயல்வதை எல்லா நாடுகளுமே உணர்ந்துள்ளன. சிறிய நாடுகளுக்கு பொருளாதார ரீதியாக வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு பெரும் கட்டுமானத்திட்டங்களை உவந்து வந்து செய்துகொடுப்பது, அதற்கான கடனையும் சீனாவே அளிக்கும். இவ்வாறான கட்டுமானங்கள் நடக்கும் வரை உள்நாட்டில் சிறிய அளவில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். ஆனால் அந்தத் திட்டம் முடிந்த பின்னர் அதனால் கிடைக்கும் என்று உத்தேசித்த வருவாய் ஏதும் வந்திருக்காது. சில சமயம் அந்தக் கட்டுமானங்களை பராமரிக்கும் அளவுக்கு கூட அந்த நாடுகளுக்கு பொருளாதார வசதி இருக்காது. அதன் பின் வாங்கிய கடனுக்கான வட்டியை அந்த நாட்டினால் கட்ட முடியாமல், அந்தக் கட்டுமானங்களை மீண்டும் சீனாவுக்கு நீண்ட கால ஒப்பந்தத்துக்கு கையெழுத்திட்டு அளிக்கும் நிலை வந்துவிடும்.**

இது போன்ற நாடுகள் சர்வதேச அமைப்புகளில் சீனாவுக்கு எதிராக ஒரு நிலைப்பாட்டை வைக்கவோ எதிராக வாக்களிக்கவோ தயங்குபவை. சாலமன் தீவுகள் விஷயத்தில் அவர்களில் GDP யில் 30% ஏற்கனவே சீனாவிடம் கடனாக வாங்கியிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் அது அதிகரிக்கவே செய்யும்.

சாலமன் தீவுகள் ஒரு சுதந்திர நாடாக யாருடனும் நட்பாக இருக்கலாம் எந்த நாட்டுடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்பது சரிதான் என்றாலும். இப்படி ஒரு ஒப்பந்தம் நிகழ்ந்திருப்பது ஆஸி வெளியுறவுச் செயற்பாட்டில் ஒரு பெரும் பின்னடைவு என்று தான் சொல்ல வேண்டும். இந்த சிக்கல் இன்று ஆரம்பித்த புதிய பிரச்சினையும் அல்ல. சில வருடங்களுக்கு முன்னரே சாலமன் தீவுகளின் பகுதியான டுலாகி (Tulagi) தீவு சீன நிறுவனம் ஒன்றுக்கு நீண்டகால ஒப்பந்தம் அடிப்படையில் அளிக்கப்பட்டது. இந்த குறிப்பிட்ட தீவில் இயற்கையான துறைமுகம் அமைந்திருப்பது .இந்த ஒப்பந்தம் கையெழுத்தான சில நாட்களுக்கும் முன்னர் சாலமன் தீவுகள் அரசு சீனாவின் அழுத்தத்தின் பேரில் தாய்வானுடன் தனது ராஜதந்திர உறவை துண்டித்துக்கொண்டது என்பதும் யதேச்சையானது அல்ல.

சாலமன் தீவுகள் என்றில்லை, ஒட்டு மொத்த பசுபிக் பகுதியிலும் சீனச் செல்வாக்கும், ஆதிக்கமும் அதிகரித்துக்கொண்டு தான் உள்ளது. ஃபிஜி, வனவாட்டு, பப்புவா, கிரிபாட்டி, டோங்கா, சமோவா என்று நீண்டு செல்லும் பட்டியல் இது. நியூ காலிடோனியா இன்னும் பிரெஞ்சு நாட்டின் கீழ் உள்ளது, பிரான்சின் ஆளுகையின் கீழ் இருந்து அவர்கள் விலகிய உடனே அங்கும் சீனா தனது செல்வாக்கை செலுத்தும், இதிலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. கடந்த நூற்றாண்டுகளில் படைபலம் கொண்டு நிகழ்ந்த காலனியாதிக்கம் இன்று பணபலம் கொண்டு நிகழ்த்தப்படுகிறது

பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சீனா என்று மூன்று நாடுகளுமே தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்த முயன்று வந்துள்ளன, ஆனால் இதில் இன்று சீனாவின் கை ஓங்கியுள்ளதை யாரும் மறுக்கமுடியாது. சாலமன் தீவுகளையும் முற்றாக குற்றம் சொல்ல முடியாது. அது போன்ற சிறிய நாடுகள் எப்படியும் ஏதோ ஒரு பெரிய நாட்டை சார்ந்து தான் இயங்க முடியும், யார் அதிகம் முதலீடு செய்கிறார்களோ அவர்கள் பக்கம் சாய்கிறார்கள். இதில் அரசியல்வாதிகளுக்கான தனிப்பட்ட லாபங்கள் இருக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆஸ்திரேலியாவுக்கு இது எல்லைப் பாதுகாப்பு, இராணுவ முதலீடு போன்ற விஷயங்களில் பல மாற்றங்களை கொண்டு வர வேண்டிய சூழலை உருவாக்கும். ஏற்கனவே அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்களை அமெரிக்காவிடம் வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இது மேலும் நாம் அமெரிக்காவிடமும் இங்கிலாந்திடமும் இராணுவ ரீதியாகக் கட்டுண்டு போகும் சூழலையே உருவாக்கும். சமீபத்தில் அமெரிக்கா, ஆஸ்திரேலிய, இந்தியா, ஜப்பான் என்ற நான்கு நாடுகளும் சேர்நது உருவாக்கிய QUAD கூட்டமைப்பு மேலும் வலுவடைய இது ஒரு முகாந்திரமாகவும் அமையலாம்.

ஆஸ்திரேலியா மிகச் சிக்கலான ஒரு காலகட்டத்தை கடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியியுள்ளது. ஆஸ்திரேலியா இருப்பது ஆசியாவுக்கு மிக அருகில். ஆனால் அது தன்னை ஒரு மேற்கத்தைய நாடாகவே அடையாளப்படுத்திக்கொள்கிறது. அதன் பொருளாதார, வியாபார உறவுகள் ஆசியாவில். ஆனால் அதன் இராணுவ உறவுகள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும். கிட்டத்தட்ட ஆஸியின் மூன்றில் ஒருபங்கு சர்வதேச வியாபார உறவு சீனாவுடன் தான் உள்ளது. அமெரிக்கா உத்தேசிப்பது போல சர்வதேசச் சிக்கல்களில் தலையிடுவதை அவர்கள் நிறுத்திக்கொண்டால் அடுத்த ஐந்து அல்லது பத்தாண்டுகளில் சீனா, ஆசிய வல்லரசாக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதை தவிர்க்கவே முடியாது. ஆஸ்திரேலியா, 'சீனா - அமெரிக்கா' என்ற துருவமாக்கலின் ஒருபக்கமாக மாட்டிக்கொள்ளாமல் தனது எதிர்காலத்தையும் அடையாளத்தையும் சுயமாக வடித்துக்கொள்ளும் நிலை நோக்கி நகர வேண்டும்.

# கங்காரு தேசத்தின் காட்சியும் ஆட்சியும் மாறுமா?







A.R.V.லோஷன்

சூடு பிடித்துள்ள அவுஸ்திரேலிய தேர்தல் களத்தில் மிக முக்கியமான - வாக்காளர்கள் மனம் மாறக்கூடிய - இறுதிக்கட்ட பிரசாரங்களும் வாக்குறுதிகளும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய காலகட்டம் இது.

தற்போதைய பிரதமர் ஸ்கொட் மொரிசனின் லிபரல் தேசியக் கூட்டணி நான்காவது தொடர்ச்சியான வெற்றியை எதிர்பார்த்திருந்தாலும், கருத்துக்கணிப்புகள் நிலைவரம் அன்ரனி அல்பனீசின் தலைமையிலான தொழிலாளர் (லேபர்) கட்சிப் பக்கம் இருப்பதாகவே சொல்கின்றன.

மூன்றாண்டுகளில் லேபர் கட்சி மிக முக்கியமான விடயங்களில் தெளிவான கொள்கை நிலைப்பாடுகளைக் காட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸ்கொட் மொரிசன் 2019 இல் பெற்றுக்கொண்ட வெற்றி 9 ஆசனங்கள் வித்தியாசத்தில் (77-68) ஒப்பீட்டளவில் நெருக்கமான ஒன்றே.

அதன் பின்னர் சில மாதங்களிலேயே ஆரம்பித்த கொவிட் -19, வெளிநாட்டுக் கொள்கைகள், உள்நாட்டில் மருத்துவத் திட்டங்கள் பற்றிய நடைமுறைகள், அகதிகள் பற்றிய அரசாங்கக் கொள்கைகள் என்று விமர்சனங்களையும் அதிருப்தியையும் சந்திக்கவேண்டி இருந்திருக்கிறது.

அவுஸ்திரேலிய அரசியல் சாசனப்படி மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை நடக்கவேண்டிய தேர்தல்கள் எப்போதுமே போட்டியிடும் கட்சிகள், வேட்பாளருக்கு மட்டுமன்றி, வாக்காளருக்கும் கூட மிகச் சவாலானவை.

ஆட்சியமைத்து ஆற அமர வாக்குறுதிகளை நிறைவேற்றி, கொள்கைத் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கிடையில் அடுத்த தேர்தல் வந்துவிடும்.

இதனால் தான் அண்மைய சில ஆண்டுகளில் அவுஸ்திரேலிய தலைமைத்துவம் அடிக்கடி ஆட்டம் காணுவதும் நிலையான பொருளாதாரக் கொள்கையில் நாடு இயங்கும்போதிலும் நிர்வாக ரீதியாக ஸ்திரமற்றது போல தென்படுவது.

ஸ்கொட் மொரிசனின் கூட்டணி ஆட்சியின் மீது ஏராளமான விமர்சனங்கள் இருந்தபோதிலும் அண்மைக்காலத்தில் 'Go Home Sco Mo' கோஷங்களுடனான எதிர்ப்புக்கள் வலுத்தபோதும் கூட, தேர்தல் நெருங்கி வரும் காலத்தில் ஆளும் கூட்டணிக்கான ஆதரவுத்தளம் மீண்டும் அதிகரிப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதற்கான காரணம் பத்தாண்டுகளுக்குப் பிறகு சடுதியான ஒரு மாற்றத்துக்கு மக்கள் ஒரேயடியாக தயாரில்லை என்பதாக இருக்கலாம்.

அதே போல லேபர் கட்சியின் பிரசாரங்களின் மிக முக்கியமான ஐந்து அம்சங்களை உள்ளடங்கியுள்ளன.

மருத்துவம் மற்றும் சுகாதாரக்கொள்கை (Pharmaceutical Benefits Scheme (PBS) உற்பத்தி சார்ந்த பொருளாதாரம் ஊதியத்தில் காணப்படும் பாலினப்பாகுபாட்டை நீக்கல், மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் மூலம் சூழல் மாசடைவை குறைத்தல், வீடமைப்பு வசதிகள் போன்ற ஐந்து அம்ச வாக்குறுதி அவுஸ்திரேலியர்களிடம் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

அந்தனி அல்பனீஸ் சொல்வதைப்போல தாங்கள் வென்றால் அடுத்த நாளே, இப்போதிருப்பதை விட சிறப்பான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதற்கான திட்டம் உடன் முடுக்கிவிடப்படும் என்கிறார்.

ஏனைய விடயங்களை விட நம்மவர்கள் பலருக்கும் யோசனையைக் கொடுப்பது வீடுகளின் விலைகள் பற்றிய விடயமே.

இதேவேளை அகதிகள் மற்றும் புலம்பெயர்வோரை உள்வாங்கும் விடயங்களில் ஆளும் லிபரல் கூட்டணி அண்மைக்காலமாகக் காட்டிவரும் நெருக்குதல்களை தளர்த்துவதாக வெளிப்படையாகவே லேபர் கட்சி தெரிவித்திருப்பதும் முக்கியமானது.

2020 இல் ஆண்டுக்கு 18,750 பேராக இருந்த அகதிகள் உள்வாங்கப்படும் எண்ணிக்கையை 13,750ஆகக் குறைத்தது மட்டுமன்றி, அண்மைய நாள்களில் சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் எழுந்த அதிருப்தி மற்றும் எதிர்ப்புக்களால் - குறிப்பாக கிறிஸ்மஸ் தீவு இடைத்தங்கல் முகாம் - ஆப்கானிஸ்தான் அகதிகளை உள்வாங்கவும் மனிதாபிமான அடிப்படையில் வேறு சமுதாயத் திட்டங்கள் உருவாக்கப்படுவது பற்றியும் ஸ்கொட் மொரிசன் கூறியிருக்க, லேபர் கட்சியானது ஒரேயடியாக வருடாந்தம் 27000 பேரை உள்வாங்கும் திட்டத்தைப் பிரஸ்தாபித்துள்ளது.

இந்த விடயம் பொதுவாகவே பல்கலாசார நாடுகளில் ஒன்றாகவும் பண்டைய மரபுரிமைகளை மதிக்கின்ற ஒரு ஜனநாயக நாடாகவும் தன்னைப் பெருமையோடு பேணி வரும் அவுஸ்திரேலியாவுக்கு முன்னெப்போதும் இல்லாத குழப்பத்தை இந்தத் தேர்தலில் வழங்கக்கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

கொவிட் பெருந்தொற்றின் காரணமான வேலை இழப்பும், பொருளாதாரச் சிக்கலும் இதற்கான முக்கியமான காரணம். எனினும் சீனா போன்ற நாடுகள் இப்போது தமது சனத்தொகையின் மனித வளத்தை பொருளாதார மேம்பாட்டில் பயன்படுத்துவதை நிகர்த்து அவுஸ்திரேலியா கடந்த தசாப்த காலமாக skilled migration மூலமாக வலுப்படுத்தியுள்ளது.

அதை லேபர் கட்சி இன்னும் அதிகரிக்கலாம்.

அல்பனீஸ் தன்னுடைய உரைகளில் மிகத் தெளிவாக உதாரணங்களை அண்மைக்காலத்தில் எடுத்துவைத்துள்ளார்.

லேபர் கட்சி இப்போது வைத்துள்ள ஆசனங்களில் இன்னும் எட்டை அதிகப்படுத்திக் கொள்வதன்மூலம் 76 என்ற ஆட்சியமைப்புக்குத் தேவையான மந்திர இலக்கை அடையலாம்.

ஆனால் லிபரல் கூட்டணியின் பாரம்பரிய வாக்குப் பலம் அவர்கள் மீதான அண்மைக்கால விமர்சனங்களைத் தாண்டி, கொவிட் காலத்தில் சிறப்பாகவே (மெல்பேர்ன் மற்றும் விக்டோரியா மாநிலம் தவிர என்று சொல்லலாமா?) கையாண்டதும் பொருளாதாரச் சுமைகளை எதிர்கொண்ட மத்திய வர்க்க , அதற்குக் கீழுள்ள மக்கள், அரச உதவிகளை எதிர்பார்த்திருப்போரை அதிருப்தி எழாமல் கையாண்டது போன்ற விடயங்கள் பலமானவையாகத் தெரிகின்றன.

எனினும் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவுகளும் மின்சாரக்கட்டண உயர்வும் மக்கள் மத்தியில் அதிருப்தியைத் தராமல் இல்லை. எனினும் தனது இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் தமது அரசு பொருளாதார முன்னேற்றங்களுக்கும் சரிவு காணாத நிதி உறுதித்தன்மைக்கும் என்னென்ன செய்திருக்கிறது என்பதைப் பிரதமர் பல இடங்களிலும் விலாவாரியாக வலியுறுத்தத் தவறுவதில்லை.

இந்த இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையிலான நேரடி மோதலாகவே தேர்தல் எப்போதும் போல இருந்தாலும் தனது சுற்றுச்சூழல் கருத்துக்கள், எதிர்காலத்துக்கான திட்ட வரைபை இரண்டு பிரதான கட்சிகளிடம் வலியுறுத்தியது போன்ற விடயங்களில் கிரீன் கட்சி இம்முறை வழமையை விடக் கவனத்தை ஈர்த்திருக்கிறது. எனினும் ஆசனங்களில் மாற்றம் ஏற்படுத்தக்கூடியளவுக்கு அல்ல.

அண்மைய நாட்களில் கருத்துக் கணிப்புக்கள் ஒரு பக்கம் இருக்க, தெற்கு அவுஸ்திரேலியாவில் லிபரல் கூட்டணியை வீழ்த்தி லேபர் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றதையும் பலர் நினைவுபடுத்தத் தவறவில்லை. மாற்றங்களின் ஒரு உதாரணமாக இந்தப் பெறுபேறுகளையும் குறிப்பிடுகிறார்கள்.

லேபர் கட்சி இப்போது வைத்துள்ள ஆசனங்களில் இன்னும் எட்டை அதிகப்படுத்திக் கொள்வதன்மூலம் 76 என்ற ஆட்சியமைப்புக்குத் தேவையான மந்திர இலக்கை அடையலாம்.

ஆனால் லிபரல் கூட்டணியின் பாரம் பரிய வாக்குப் பலம் அவர்கள் மீதான அண்மைக்கால விமர்சனங்களைத் தாண்டி, கொவிட் காலத்தில் சிறப்பாகவே (மெல்பேர்ன் மற்றும் விக்டோரியா மாநிலம் தவிர என்று சொல்லலாமா?) கையாண்டதும் பொருளாதாரச் சுமைகளை எதிர்கொண்ட மத்திய வர்க்க , அதற்குக் கீழுள்ள மக்கள், அரச உதவிகளை எதிர்பார்த்திருப்போரை அதிருப்தி எழாமல் கையாண்டது போன்ற விடயங்கள் பலமானவையாகத் தெரிகின் றன.

மொரிசனின் இந்த ஆட்சிக்காலத்தில் தெற்கு அவுஸ்திரேலியாவில் மாத்திரமல்லாது, முழு அவுஸ்திரேலியாவிலும் லிபரல்களின் ஆட்சி குறித்த பலத்த விமர்சனம் முக்கியமாக காட்டுத்தீ - கொரோனா - வெள்ளம் போன்ற பேரிடர்களின்போது நிர்வாகச் சீரின்மை குறித்து மக்களின் அதிருப்தி மேலோங்கியது. பேரிடர்கள் ஏற்பட்டவுடன் அதன் தாக்கம் பெருமளவில் பரவி விடாமல் தடுப்பதற்குப் போதிய அவகாசமிருந்தபோதும் - அந்தச் சந்தர்ப்பங்களைத் தவறிவிட்ட லிபரல் கூட்டணி அரசு - மிகத் தாமதமாகவே இடர் மேலாண்மைப் பணிகளை மேற்கொண்டது என்ற பெரும் குற்றச்சாட்டு நாட்டு மக்கள் அனைவரிடம் பெருமளவில் காணப்பட்டது. இதன் விளைவைத் தான் தெற்கு அவுஸ்திரேலிய தேர்தல் முடிவுகளில் மக்கள் காண்பித்ததாகவும் அதன் தாக்கம் இந்த 47ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தலிலும் பிரதிபலிக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் மீண்டும் அவுஸ்திரேலியாவில் கொவிட் அதிகரிப்பும் நூற்றுக்கு மேற்பட்ட மரணங்களும் மீண்டும் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்துள்ளன. அத்துடன் இந்த வாரத்திலும் அகதிகளின் மீதான கடும்போக்கான நடவடிக்கையிலான செய்தி ஒன்றும் கவனத்தை ஈர்த்துள்ளது.

சமூகத்துக்கு ஆபத்தானவர்கள் என கருதப்பட்டு விசா ரத்துச் செய்யப்பட்டவர்கள், அதிலும் குடிவரவுத் திணைக்களத்தினால் அகதி என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் உட்பட கிறிஸ்மஸ் தீவு தடுப்புமுகாமுக்கு முன்னறிவித்தல் எதுவுமின்றி அழைத்துச்செல்லப்பட்ட சம்பவம் மனித உரிமை அமைப்புக்களால் கண்டிக்கப்பட்டிருந்தது.

இதை கிரீன் கட்சி கடுமையாக எதிர்த்திருந்த நிலையில், இப்போதைய ஆட்சியாளர்களால், மீண்டும் கடந்த 2020 இல் திறக்கப்பட்ட கிறிஸ்மஸ் தீவு அகதி முகாமில் தற்சமயம் 120பேர் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இந்த விடயமும் வெளிநாடுகளில் இருந்து வந்து அவுஸ்திரேலியப் பிரஜாவுரிமை பெற்றவர்களிடம் தாக்கத்தை செலுத்தும் ஒரு பிரசாரமாக மாறக்கூடும்.

26 மில்லியன் சனத்தொகை கொண்ட அவுஸ்திரேலியாவில் கடந்த 2019 தேர்தலில் பதிவு செய்த வாக்காளர்கள் 16.4 மில்லியன் பேரில் 92 வீதமானோர் வாக்களித்திருந்தார்கள். ஒரு நாட்டின் பொதுத்தேர்தலில் சதவீதக் கணக்கில் அதிகளவானோர் வாக்களித்த சந்தர்ப்பங்களில் ஒன்று இது என்று குறிப்பிடப்படுகிறது. இம்முறை தேர்தலில் வாக்களிக்க 17,228,900பேர் தகுதிபெற்றுள்ளார்கள்.

AEC என்று சுருக்கமாக அழைக்கப்படும் அவுஸ்திரேலிய தேர்தல் ஆணையகம் அனைவரும் கட்டாயமாக வாக்களிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

வாக்காளர் பட்டியலில் பதிந்துள்ள அனைவரும் வாக்களிப்பது கட்டாயமாகும் என்பதுடன்

அவரவர் தத்தம் தேர்தல் தொகுதியில் வாக்களிப்பதை உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளார் அவுஸ்திரேலிய தேர்தல் ஆணைய அதிகாரி ஜெஸ் லில்லி.

அதிகமானோர் வாக்களிக்கவேண்டும் என்பதை ஊக்குவிக்க மிகத் தெளிவான விடயங்கள் AEC இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் தேர்தல் நாளன்று வெளிநாடு அல்லது வெளி மாநிலம் செல்வோர் முதல் கொவிட் தொற்றுக்குள்ளானோர் வரை பலருக்கும் வசதிகளும் தகவல்களும் இருக்கின்றன.

தெளிவான தரவுகளுடன் சிந்தித்து தெளிவான மன நிலையோடு நீங்கள் அளிக்கப்போகின்ற வாக்கு நிதானமான எதிர்கால ஆட்சியொன்றை கங்காரு தேசத்துக்கு வழங்கும்,

மாற்றமா? இல்லை மாறாத நிலையா? என்பதை அடுத்துவரும் வாரம் சொல்லும்.





# பெரேராக்களின் பரவணிக்குணம்

என்னதான் மனிதன் பரிணாம வளர்ச்சி பெற்று இந்தளவுக்கு நாகரிக மனிதனாக மாறினாலும் கூட, அவ்வப்போது தனது மூதாதையர் குரங்குகளே என்று நினைவூட்டுவது போல நடந்து கொள்வதுண்டு. அதுபோலவே சில இலங்கையர்களும், முழுதாக அவுஸ்திரேலியக் குடிமக்களாக மாறிய பின்னரும், தங்கள் தாய்நாட்டின் குணத்தை காட்டிவிடுகின்றனர். இதைத்தான் பரவணிக்குணம் என்பார்கள். அதற்கு சமீபத்திய உதாரணம் தான், விரைவில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தல். இந்தத் தேர்தலில் லிபரல் கட்சி சார்பில் இலங்கையைச் சேர்ந்த இரு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பிரதமர் ஸ்கொட் மொறிசன் அவுஸ்திரேலியாவின் பல்லின சமூகத்தின் மத்தியில் சகல இனமக்களுக்கும் சமசந்தர்ப்பம் வழங்குவதாகக் காட்ட நினைத்தே, இரு இலங்கையர்களுக்கு வேட்பாளராகும் வாய்ப்பைக் கொடுத்தார். ஆனால் உள்ளதையும் கெடுத்த நொள்ளிக் கண்ணனாக, மொறிசன் செய்த அந்தக்காரியம் இப்போது அவருக்கும், கட்சிக்கும் அவப்பெயரை தேடிக்கொடுத்துள்ளது.

அப்படி ஒரு நாட்டின் பிரதமருக்கும், ஆளுங்கட்சிக்கும் அவமானம் வரும் வகையில் நம்மவர்கள் என்னதான் செய்தார்கள்?

இல்ங்கையச் சேர்ந்த இவ்விரு வேட்பாளர்களில் ஒருவரான விரோஷ் பெரேரா ஒரு முன்னணி கிரிக்கெட் வீரர். மொறிசனுக்கு நெருக்கமானவர். அத்தோடு ரியஸ் எஸ்டேட் வியாபாரத்திலும் விரோஷ் பெரேரா அவுஸ்திரேலியாவில் ஈடுபடுகின்றார். அப்படிப்பட்டவர் தானொரு செல்வாக்கான ஆளென்று அனைவரையும் நம்ப வைப்பதாக 'எனக்கு அவுஸ்திரேலியாவில் மட்டுமல்ல, அமெரிக்காவில் ரியல் எஸ்டேட் வியாபாரம் உள்ளது" என்று இஷ்டத்துக்கு கதையளந்திருக்கிறார். அத்தோடு நில்லாமல் வேர்ஜினா ஹொலண்ட், டொனால்ட் டக்ளஸ் என இரு வெள்ளையின நபர்கள்தான் தனது அமெரிக்க நிறுவனத்தின் பிரதிநிதிகள் புகைப்படங்களோடு கூடிய விளம்பரங்களையும் பிரசுரித்திருந்தார். ஆனால் அப்படி ஒரு நிறுவனமே அமெரிக்காவில் இல்லையென்பதையும், விரோஷ் பெரேரா தனது பிரதிநிதிகள் என்று வெளியிட்ட விபரம், புகைப்படம் என்பன கூட சோடிக்கப்பட்டவை என்பதையும் எதிர்க்கட்சியினர் ஆதாரத்தோடு வெளியிட்டுள்ளனர். இப்போது திருடனுக்கு தேள் கொட்டியது போல விரோஷ் பெரேரா கூனிக்குறுகி, தேர்தல் பிரசாரத்துக்கு கூட தலைகாட்டாமல் திரிவதாகக் கேள்வி. கூடவே போலியான தகவல்களை வெளியிட்டமைக்காக அவரது வியாபார இணையத்தளமும் முடக்கப்பட்டுவிட்டது.

விரோஷ் பெரேரா தான் இப்படி என்றால், இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இன்னொரு வேட்பாளரான ரஞ்ச் பெரேரா வேறொரு வகையிலான தில்லாலங்கடித்தனத்தை தைரியமாகச் செய்துள்ளார்.

இவர் மெல்பேர்னின் தென் கிழக்கு பகுதியில் லிபரல் கட்சி சார்பில் போட்டியிடுகிறார். அவருக்கு தன் சுவரொட்டிகளை, இலங்கையில் ஒட்டுவது போல

பிரதமர் ஸ்கொட் மொறிசன் அவுஸ்திரேலியாவின் பல்லின சமூகத்தின் மத்தியில் சகல இனமக்களுக்கும் சமசந்தர்ப்பம் வழங்குவதாகக் காட்ட நினைத்தே, இரு இலங்கையர்களுக்கு வேட்பாளராகும் வாய்ப்பைக் கொடுத்தார். ஆனால் உள்ளதையும் கெடுத்த நொள்ளிக் கண்ணனாக, மொறிசன் செய்த அந்தக்காரியம் இப்போது அவருக்கும், கட்சிக்கும் அவப்பெயரை தேடிக்கொடுத்துள்ளது.

அப்படி ஒரு நாட்டின் பிரதமருக்கும், ஆளுங்கட்சிக்கும் அவமானம் வரும் வகையில் நம்மவர்கள் என்னதான் செய்தார்கள்?

ஊரெல்லாம் ஒட்டவேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. ஆனால் அப்படி கண்ட இடங்களில் எல்லாம் ஒட்ட இதென்ன இலங்கையா? அவுஸ்திரேலியாவில் ஒரு சுவரொட்டியை ஒட்டவே ஆயிரத்தெட்டு அனுமதிகளல்லவா எடுக்க வேண்டும். ஆனால் நம்மவர் இலங்கையர் அல்லவா? அதனால் அவரது மூளை இன்னொரு வழியைக் கண்டுபிடித்தது. 'சுவரொட்டியை ஒட்ட, பனர்களைக் காட்சிப்படுத்தன் உள்ளூராட்சி நிர்வாகத்திடம் அனுமதி எடுத்துவிட்டேன்' என்று 'கப்சா' அடித்துவிட்டு, ஊரெல்லாம் தன் தேர்தல் பிரசார பனர்களை , மரச்சட்ட வேலிகளில் துளையிட்டு பொருத்தி இருக்கிறார். அப்படி அவரின் பனர் பொருத்தப்பட்ட வீடொன்றின் உரிமையாளருக்கு 'இவர் உண்மையிலேயே அனுமதி பெற்றிருப்பாரா?' என்ற சந்தேகம் வர, உடனேயே உள்ளூராட்சி நிர்வாகத்தை நாடியிருக்கிறார். அங்கு 'அப்படி ஒரு அனுமதியை நாங்கள் வழங்கவில்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வீட்டுக்காரரும் சாதாரணமாக அதைக் கடந்து போக விரும்பவில்லை. ரஞ்ச் பெரேராவுக்கு ஒரு பாடம் படிப்பிக்க நினைத்தார். 'உள்ளாட்சி நிர்வாகத்தினதினதும், எனதும் அனுமதி பெறாமல் என் வேலியில் பனர் கட்டிய மோசடிக்காரன்' என்று ரஞ்ச் பெரேராவின் படத்தையும், பக்கத்தில் அவர் பொருத்திய பனரின் படத்தையும் போட்டு, நையாண்டி இணையமொன்றில் பதிவிட, அந்த விடயம் காட்டுத்தீயாகப் பரவி, ரஞ்ச் பெரேராவுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச மானத்தையும் வாங்கிவிட்டது. உடனேயே ஓடிப்போய் அந்த வீட்டு உரிமையாளரிடம் கெஞ்சிக் கூதாடி மன்னிப்புக் கேட்டுள்ளார் ரஞ்ச் பெரேரா. ஆனால் போன மானம் போனதுதானே? தாமும் அவமானப்பட்டு, தாம் சார்ந்த கட்சியையும் அவமானப்படுத்திய பெரேராக்களை நினைத்து மொறிசனும் கடும் 'அப்செட்டில்' இருக்கிறாராம்.

# இலங்கையில் அரசாங்கம் மாத்திரம் விழவில்லை அரசும் ஆட்டம் கண்டிருக்கிறது என்பதே சிக்கல்

## ‘மல்லியப்புச் சந்தி’ திலகர்

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியைப் பற்றியும் அவற்றுக்கான தீர்வு யோசனைகளையும் இங்கே “எதிரொலி” க்காக மேற்கொள்ளப்பட்ட நேர்காணலில் பேசுகிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் பட்டதாரியுமான மயில்வாகனம் திலகராஜ் (மல்லியப்புச் சந்தி திலகர்) . அரசியல், சமூகச் செயற்பாடு, பொருளாதாரத்துறை, இலக்கியம் எனப் பல தளங்களில் இயங்கி வரும் திலகராஜ், 2015 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது நுவரலியா மாவட்டத்தில் 67,761 விருப்பு வாக்குகள் பெற்று தெரிவானவர். புதிய அரசியல் சிந்தனையும் பண்பாடும் இலங்கை அரசியலில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதைச் செய்யக் கூடிய இளைய தலைமுறையின் பங்கேற்பு அவசியம் என்று குறிப்பிடும் திலகராஜ், தற்போது “மலையக அரசியல் அரங்கம்” (MPA) என்ற கட்சிக்குத் தலைமை தாங்கி மக்கள் மத்தியில் களப்பணியாற்றி வருகிறார்.

**இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி தணியக்கூடிய, தீரக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டா?**

இப்போதைக்கு இல்லை.காரணம் இலங்கையில் ஆட்டம் கண்டிருப்பது அரசாங்கம் மட்டும் இல்லை அரசும் ஆட்டம் கண்டு இருக்கிறது.

வழமையாக அரசாங்கங்கள் ஆட்டம் காணும்போது இன்னுமொரு அரசாங்கத்தைக்கொண்டு அரசு நிர்வகிக்கப்படும். அப்போது கொள்கை மாற்றங்களால் அல்லது தீர்மானங்களால் அரச நிர்வாகம் முன்கொண்டு செல்லப்படுவதுண்டு. ஆனால் இப்போது அரசாங்கத்தில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை. அதே ஜனாதிபதி, அதே பிரதமர், அவர்களது அணியில் இருந்தே கலைக்கப்பட்ட பின்னரும் கூட அமைக்கப்பட்டதான அமைச்சரவை என அரசாங்கம் மாறாமல் இருக்க அரசு ஆட்டம் கண்டு இருக்கிறது. எனவே அரசாங்கத்தை மாற்றிவிடுவதால் ஆட்டம் கண்டிருக்கும் அல்லது சரிந்திருக்கும் அரசினைக் கட்டியெழுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் இப்போதைக்கு இல்லை. அரச கட்டமைப்பு மறுசீரமைப்பு அவசியமாகிறது.

**ஆட்சித் தரப்பு ஆட்டம் காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்கட்சிகள் ஏன் ஒருங்கிணைய முடியாது உள்ளன?**

அவை இருக்கின்ற அரசாங்கம் விழுந்ததன் பின்னர் தாம் அந்த இடத்தை நிரப்பிவிடலாம் என்ற திட்டத்தில் இருந்தனவே தவிர அரசு ஆட்டம் காணுமிடத்து அதனைச் சரிசெய்யும் திட்டங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. அதுவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்போது அரச முறைமை சரியும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. வழமைபோல ஆளுங்கட்சி மீது ஐந்து ஆண்டுகளின் பின்னர் மக்களுக்கு வெறுப்புணர்வு ஒன்று வரும், அதற்கான காரணங்களைத் தாம் சோடித்துப்பேசி எங்களிடம் தாருங்கள் நாங்கள் ‘நிமிர்த்துகிறோம்’ என பிரசாரம் செய்து தமது அரசாங்கத்தை அமைத்துவிடலாம் என்ற கனவிலேயே இருந்தார்கள். ஆனால் மக்களோ எதிர்கட்சிகளை முந்திக்கொண்டு வீதியில் இறங்கி விட்டார்கள். இப்போது மக்கள் முன்னே செல்ல எதிர்கட்சிகள் மக்கள் பின்னே செல்கிறார்கள்.

மக்கள் System Change கேட்கிறார்கள். மக்கள் எதிர்பார்க்கும் System Change க்குள்ளே கொண்டு வர 225 இல் 25 தனிநபர்களை வேண்டுமானால்தேடிப்பிடித்து தெரிவு செய்யலாமே தவிர எதிர்க்கட்சியொன்றாக, தனியாகவோ கூட்டாகவோ அடையாளம் காண முடியாது உள்ளது.

**அரசாங்கத்துக்கும் அதிகாரத்தில் உள்ள ராஜபக்சவினருக்கும் எதிராக மக்கள் நடத்தும் போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன? இதன் பின்னணி என்ன?**

இந்தப் போராட்டம் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தான் என்றாலும் மக்களை இந்தக்கட்டத்துக்கு



கொண்டு வருவதில் மறைகரங்கள் இல்லாமல் இருக்கமுடியாது. அது நுண் அரசியல். மிக நுணுக்கமாக இலங்கை அரசியலை அவதானிப்போர் அதனை அறிவர்.

இந்தப் போராட்டத்தில் உள்ள முதன்மைப்பக்கமானது ராஜபக்சவினருக்கு எதிராக மக்கள் பெருமளவில் அணி திரண்டிருப்பதுதான். அந்த நோக்கம் நிறைவேறிக்கொண்டு வருகிறது. இந்தத் திகதியில் (மே 01- 2022) போராட்டம் ஒரு மாத காலத்தை நிறைவு செய்கிறது. ஒரு மாத காலத்தில் போராட்டக்காரர்கள் அடைந்த அடைவுகளின் பட்டியல் இதனைக் காட்டுகிறது.

ராஜபக்சவின் முகவராக மத்திய வங்கி ஆளுநராக விருந்த கப்ரால் பதவி நீக்கம், அமைச்சரவை கலைப்பு, மீண்டும் அமைந்த அமைச்ரவையில் சமல், பஷில், நாமல், சஷீந்திர எனும் நான்கு ‘ராஜபக்ச’ அமைச்சர்கள் நீக்கம் என்பன நிகழ்ந்து பிரதமர் ஆசனத்தில் இருக்கும் மஹிந்த ராபக்சவின் ஆசனம் ஆட்டம் கண்டுகொணடிருக்கிறது. இன்னும் ஒரு எல்லைக்கோட்டைத்தான் போராட்டக்காரர்களால் அடையவேண்டியுள்ளது. அது கோட்டாபய வின் வெளியேற்றம். மஹிந்தவின் ஆசனம் பறிபோனால் அதற்கடுத்து மாறும் காட்சிகள் கோட்டாபயவை கீழிறக்கும் சாத்தியங்களை உருவாக்கும். இதோடு போராட்டக்களம்

**நேர்கண்டவர் - அதிசயன்**

முடிவுக்கு வந்தாக வேண்டும்.

எனவே, இதன் பின்னணி ஆட்சி மாற்றம் ஒன்றுக்கானதாக மாத்திரமே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதன் பின்னதான நடவடிக்கைகளுக்கும் போராட்டக்களமே பொருத்தமானதாக இருக்க முடியாது் அரசியல் களமே பொருத்தமானதாக அமையும்.

அரசாட்சியில் ( Governance), அரசாங்கத்தில் ( Government), அரசியல்வாதிகளில் ( Politicians) குறைகண்ட போராட்டக் குழுவினர் குறிப்பாக இளைய சமூகத்தினர் அரசியல் களம் காண வேண்டும். அப்போதே அவர்கள் எதிர்பார்க்கும் System Change இனைக் கொண்டுவர முடியும்.

இல்லாவிட்டால் இன்னமொரு ஐந்து ஆண்டுகளில் அடுத்த அரசாங்கத்துக்கு எதிராகவும் இதே போல போராட நேரிடும். அதன் போது இப்போதைய போராட்டக்காரர்கள் விரக்தியுற்றவர்களாக பார்வையாளர்களாகி நிற்க, புதியவர்கள் போராடிக்கொணடிருப்பார்கள். இப்படி போராட்டங்கள் மாத்திரமே தொடர்கதையாக இருக்கும்.

**இடைக்கால அரசாங்கம் தேசிய அரசாங்கமாக அமையுமா? அல்லது ஆட்சி மாற்றம் நிகழ்வதற்கான வாய்ப்புகள் உண்டா?**

இடைக்கால அரசாங்கம் என்றாலே அது ‘தொங்கு(ம்) அரசாங்கம்’ தான். தொங்குவது சீக்கிரம் விழும். அதன்பிறகு தேர்தல் நடக்கும். ஆட்சி மாற்றம் நடக்கும். System Change ஒன்று உடனடியாக வராது.

**பொருளாதார நெருக்கடி தீர்ந்தால் மக்களின் போராட்டமும் அரசாங்கத்தின் மீதான எதிர்ப்புணர்வும் மறைந்தவிடும் என பிரதமர் மஹிந்த ராஜபக்சகூறியுள்ளாரே?**

அவரது கடந்தகால அனுபவங்களின் அறுவடை அது. ஒரு வகையில் இலங்கை மக்கள் மறதிக்கு பேர்போனவர்கள், இலகுவாக உணர்ச்சிவசப்படுபவர்கள் எனும் புரிதல்களின் அடிப்படையில் பிரதமர் அப்படி கூறியிருக்கக்கூடும்.

2018 ஆம் ஆண்டு 52 நாட்கள் ஆட்சியை அவர் திருடி வைத்துக்கொண்டபோதும், அதற்கு மைத்திரிபால சிரிசேன துணைநின்றபோதும் அதற்கடுத்த (2020) தேர்தலிலும் இவர்கள் இருவருக்கும் வாக்களித்து மீண்டும் நாடாளுமன்றம் அனுப்பிய மக்கள் இலங்கையர்கள்தானே என எண்ணியிருக்கக் கூடும். மகிந்த கூறும் எதிர்ப்புணர்வுகள் மறையலாம். ஆனால் இலங்கை வரலாற்றில் ராஜபக்சவினர் கொண்டிருந்த உச்சத்தில் இருந்து இறக்கப்பட்டு இப்போது படும் அவமானம் வரலாற்றில் எப்போதும் மறையவே மறையாது.

**நெருக்கடியிலிருந்து நாட்டைமீட்பதற்கான பிறமுனைப்புகள், முயற்சிகள் (அறிவுத்துறையினர், பொருளதாரத்துறையினர் உட்படட) ஏதாவது உண்டா?**

நல்லாட்சி அரசாங்க உருவாக்கத்தின் போது சோபித தேரர் தலைமையில் முன்னெழுந்த சிவில் சமூகக் குழுக்களையும், கோட்டா அரசாங்கத்தை அமைப்பதற்கு இயங்கிய ‘வியத்மக’குழுவையும் எடுத்து நோக்கினால் நீங்கள் கூறும் அறிவுத்துறையினர், பொருளாதாரத்தறையினர் இல்லாமல் இல்லை. அப்படியாயின் ஏன் இரண்டு அரசாங்கங்களும் மிகக் குறுகிய காலத்தில் தோல்வியைத் தழுவின?. நல்லாட்சி அரசமைக்க அமுக்கக்குழுவாக இருந்துவிட்டு ஆட்சியதிகாரத்தை வழமையான அரசியல்வாதிகள் கைகளிலேயே கொடுத்தார்கள்.

சிலர் சிவில் சமூக உடைகளைக் கழற்றி வைத்துவிட்டு ஆட்சியில் இருந்த கட்சி உடைகளைத் தரித்தார்கள். அங்கே அரசியல் கலாசார மாற்றம் இடம்பெறவுமில்லை. கள்ளர்களைக் கைது செய்யாதபோது அதனைக் கேட்க அமுக்கக்குழுவாக முன்வரவில்லை அல்லது இல்லை.

இந்த பலவீனத்தைப் புரிந்துகொண்ட கோட்டா அணி, அந்த அறிவுத்துறையை இலக்குவைத்து ‘வியத்மக’ அணியை உருவாக்கி நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் கொண்டு சென்றது. அது ஆட்சிமாற்றத்துக்கு வழங்கிய பங்களிப்புக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட சன்மானமாக அமைந்ததே தவிர அவர்களது அறிவைக் கொண்டு திட்டங்களை வடிவமைக்கும் களமாகவில்லை. அவர்கள் ‘பின்வரிசை உறுப்பினர்கள்’ என அமர வைக்கப்பட்டார்கள்.

இந்த இரண்டு பின்னணிகளையும் கொண்டு நோக்குகையில் ‘நாடாளுமன்ற உறுப்பினர்’ எனும் பதவியை கவர்ச்சியாக கருதாத, அதன் குறைபாடுகளை நன்குணர்ந்த, தற்போதைய நாடாளுமன்ற அரசியல் கலாசாரத்தில் மாற்றங்களைச் செய்யும் திராணி கொண்ட அறிவுத்துறையினர் சுயாதீனமாக தமது அரசியலை முன்வைத்து, அரசியல் களம் கண்டு, ஏதேனும் செய்ய முயற்சிக்காதவரை, அறிவுத்துறையைச் சார்ந்தவர்களின் ஓர் அரசியல் குறித்து பாரிய எதிர்பார்ப்புகள் எதனையும் கட்டமைத்துக்கொள்ளக் கூடாது. ஆனால் அத்தகைய அரசியல் ஒன்றுக்கான தேவை இலங்கையில் தாராளமாக உள்ளது.

இப்போது இயங்கும் கட்சிகள் அதன் முறைமைகள் எல்லாமே ஒரே மரபுசார்ந்தவை. புத்தாக்கச் சிந்தனையுடன் (Innovative thinking) கூடிய அரசியல் அணியினரின் வருகையே அவசியம். போராட்டக் களங்களிலும் அந்தக்குரல் கேட்கிறது. அத்தகைய அணி உறுப்பினர்கள் அவர்களுக்குள்ளும் இருக்கிறார்கள் என அவர்கள் உணர வேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)




# பிள்ளையாருக்கே அள்ளிக்குடுத்த அலன்

**த.த:** அண்ணே! சிலசமயத்தில நாம ஆஸ்திரேலியால இருக்கோமா இல்லை இந்தியால இருக்கோமாங்கிறதே கன்புயூஸ் ஆயிடுது.

**ஈ.அ :** ஓமடா தம்பி! அதிலயும் நியாயம் இருக்குத்தான். இப்ப இஞ்ச இந்தியால இருந்து வந்த சனம் கூடத்தானே?

**த.த :** அட நான் சொல்றது அதில்லண்ணே. நம்ம அலன் டட்ஜ் எம்.பி. இருக்காரில்லையா?

**ஈ.அ :** ஓம், அவருக்கென்ன? ஏதும் இந்தியச் சாப்பாடு சமைச்சு பேஸ்புக்கில போட்டிருக்கிறாரோ?

**த.த :** இந்தியச் சாப்பாடு சமைக்கிறதெல்லாம் கதை தனிக்கதைண்ணே. இது அவரும் லிபரல் கட்சியும் ஜெயிச்சிட்டா , பேசின்ல இருக்கிற வக்கிர துண்ட பிள்ளையாருக்கு 1.5 மில்லியன் டாலரை குடுப்பேன்னு சொல்லியிருக்காப்ல நம்ம அலன் தோழர்!

**ஈ.அ :** எட! எங்கட நாட்டில 'சோத்துப் பார்சலும் ஐயாயிரம் ரூவா காசும் தாறம் , எங்களுக்கு வோட்டு போடுங்கோ' எண்ட அதே டிசைனா எல்லோ கிடக்கு?

**த.த:** ஓ ! ஸ்ரீ லங்காலயும் அப்பிடி நடக்குதா? நம்மூர்லயும் ஒரு ஓட்டுக்கு குவாட்டரும் பிரியாணியும் குடுப்பாங்க.

**ஈ.அ:** அப்ப அந்த வருத்தம் எங்களோட சேர்ந்து இப்ப அலனுக்கும் தொத்திட்டுது போல. இது பொல்லாத தொத்து வருத்தமடா தம்பி. இஞ்ச இப்பதானே தொத்தி இருக்கு. இந்தமுறை கோயிலுக்கு தாற காசை, அடுத்தமுறை குவாட்டருக்கும் தரக்கூடும். அப்பதானே எங்கட வோட்டை எடுக்கலாம். ஆனாலும், அலன் ஒரு விண்ணன் தான். எங்கட நாட்டு அரசியலை சரியாப் படிச்சு வைச்சிருக்கிறான் போல.

**த.த:** எல்லாம் அந்த இந்து வாக்குகளை அள்ளிக்க தான் இப்பிடி கோயிலுக்கு அள்ளிக் குடுக்கிறாங்க. இதே ஸ்டைல்ல போச்சுன்னு வச்சுக்கோங்க ப்யூச்சர்ல அகில ஆஸ்திரேலிய இந்து மக்கள் கட்சி அப்பின்னு ஒரு புதுக்கட்சி வந்தாலும் வந்துரும். யார் கண்டது, அதுக்கு நம்ம அலன் தான் தலைவராகவும் வர்லாம். இல்லியா அண்ணே?

**ஈ.அ:** நல்ல கதை! அப்பிடி ஒரு கட்சி தொடங்கினால் எங்கட ஆக்கள் சும்மா விடுவாங்களோ? அதை ரண்டா உடைச்சு 'ஆஸ்திரேலிய இலங்கை தமிழர் கட்சி'தொடங்கிடுவாங்கள் கண்டியோ. எங்கட ஆக்களைப் பற்றி உனக்கு விளங்கேலை.




# இலங்கையில் அரசாங்கம் மாத்திரம் விழவில்லை அரசும் ஆட்டம் கண்டிருக்கிறது என்பதே சிக்கல்

**(14ஆம் பக்கத் தொடர்ச்சி)**

**உங்கள் பார்வையில் இலங்கையின் இன்றைய நெருக்கடிகளை எப்படித் தீர்க்கலாம்?**

குறுங்கால தீர்வாக கடன், நன்கொடை பெறுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் கடன் முகாமைத்துவம் குறித்த தெளிவான சிந்தனையுடன் அது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மத்திம கால தீர்வாக, பொருளாதார கொள்கை வடிவமைப்பில் அதிக அக்கறை காட்டப்படல் வேண்டும். 'திட்டமிடல்'(planning ) எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு நடைமுறைப்படுத்தலின்போது (implementing) 'மேற்பார்வையும் மதிப்பாய்வும்'(Monitoring and Evaluation) மிகமிக அவசியம்.

நீண்ட காலத்தில் கட்டமைப்பு மறுசீரமைப்பும் (Structural reform), யாப்பு மாற்றங்களும் (constitutional Reforms) அவசியம். அது நாட்டுக்கு மட்டுமல்லாது நிறுவனங்களுக்குமானதாக அமைதல் வேண்டும்.குறிப்பாக மத்திய வங்கி.

இலங்கையில் கடன் பெறுவதற்கோ அல்லது நன்கொடை பெறுவதற்கோ இதுவரை எந்த அரசாங்கமும் பொதுமக்களும் கூட கூச்சம் அடைந்ததில்லை. இது பெரிய குறைபாடு. நாட்டில் முன்னணிக் கம்பனிகள் பத்தினை எடுத்தால் அதில் எட்டு நிதிக்கம்பனிகள் அல்லது வங்கிகள். இவை எப்படி முன்னணியில் இருக்கின்றன? அவர்கள் அதிகளவு கடன் கொடுத்து வருமானம் ஈட்டி இருக்கிறார்கள். அப்படியென்றால் நாடு கடனில்தானே இருக்கிறது. இதனை மாற்றி அமைப்பதற்கு பதில் அந்த நிறுவனங்களுக்கு வருடாந்தம் விருது வேறு கொடுக்கப்படுகிறது. அவை தொடர்ந்து கடன் கொடுக்கின்றன. மக்கள் வாங்குகிறார்கள். எனவே இங்கு வழங்கப்படும் கடன்கள் அபிவிருத்திக்கான முதலீடுகளாக மாறுகின்றனவா என மதிப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது கைதட்டிஆர்ப்பரிக்கப்படுகின்றது. ஆனால் அடுத்த ஆண்டு வரவு செலவு திட்ட சமர்ப்பணத்தின்போது கடந்த ஆண்டு முன்மொழிவுகளுக்கு என்ன நடந்தது? எனும் கேள்வி எழும்புவதில்லை. இலங்கையின் வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்படும் 52 சதவீதமானவை நிறைவேற்றப்படுவிதில்லை என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே சுதந்திரத்துக்குப் பின்னான 74 ஆண்டுகளில் ஏறக்குறைய 37 ஆண்டுகள்தானே வளர்ச்சி அடைந்திருக்கும். அப்படியாயின் நாம் குறைவிருத்தி நாடாக இருப்பதற்கு காரணம் இதுவல்லவா? நமது திட்டமிடலை நடைமுறைப்படுத்தும்போது மேற்பார்வையும் மதிப்பாய்வும் அவசியம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் தேசிய ரீதியாக மதிப்பாய்வு கொள்கை ஒன்றே இருக்கவில்லை. மிகுந்த பிரயத்தனங்களுக்கு மத்தியில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சித்து தேசிய மதிப்பாய்வுக் கொள்கையைக் (2018) கொண்டுவந்தோம். அதற்கான சட்டநகலையும் வரைந்தோம்.இவை இரண்டிலுமே எனது பங்களிப்பும் அதிகளவு இருந்தது. நாடாளுமன்றம் (2020) கலைக்கப்படப் போவதை அறிந்து அவசரமாக வரைபினை முடித்து அதனை நாடாளுமன்றத்துக்கு கையளித்து விட்டு வந்தோம். இந்த அரசு குப்பைத்தொட்டியில் வீசி இருக்கும் என நினைக்கிறேன்.

வறுமை ஒழிப்பு திட்டமான சமுர்த்தியை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். தொடங்கப்பட்டு முப்பது ஆண்டுகளில் அந்த உதவியைப் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இப்போது நீங்கள் யோசியுங்கள் இலங்கையில் வறுமை ஒழிக்கும் திட்டமா வளர்க்கும் திட்டமா நடைமுறையில் உள்ளது? இதனை மதிப்பாய்வு செய்தல் வேண்டாமா? திட்டமாகத் (Project) தொடங்கப்பட்ட வறுமை ஒழிப்பு நோக்க நிறைவின் போது மூடப்படுவதற்கு ( Project close) பதிலாக நிரந்தர திணைக்களமாக மாற்றப்பட்டு ஒரு நிகழ்ச்சியாக ( program) அதன் உத்தியோகத்தர்கள் ஓய்வூதியம் பெறுபவர்களாக மாற்றப்படுவதாக இருந்தால் இலங்கையில் 'வறுமையை' நிர்ந்தரமாக வைத்துக்கொள்வதற்குத் தேவையான அரசியல் முன்னெடுப்புகளைத் தானே காண முடிகிறது.

யாப்பு மாற்றங்கள் வேண்டும் என தனியே நாட்டுக்கான 'அரசியலமைப்பை'மாத்திரம் நான் கூறவில்லை. மத்திய வங்கியின் யாப்பு அல்லது அமைப்புவிதி உட்பட, அரச பொது நிறுவனங்கள்பலதும்யாப்புகள்திருத்தப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். எல்லாவிதமான நிறுவனங்களுக்குமான அரசியல் நியமனங்கள் முற்றாக நிறுத்தப்படும் சரத்து அதில் உள்வாங்கப்படுதல் வேண்டும். பணித்துறையாட்சியும்அரசியல்மயப்படுத்தப்பட்டதன் மோசமான விளைவுகளையே இன்று அனுபவிக்கிறோம். இரண்டு சமாந்தரமான தண்டவாளங்களாக பயணித்தக்க வேண்டிய அரசாங்கமும் பணித்துறையும் ஒன்றானதால் அரசு ரயில் தடம் புரண்டு நிற்கிறது.

**8. இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் என்ற ஆதிக்க வியூகத்தில் இலங்கை இன்று எததகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்?**

இந்த மூன்று நாடுகளும் இலங்கைக்கு உதவுகின்றன. அவை கடன்களாகவும் நன்கொடைகளாகவும் உள்ளன. உதவிகளையோ கடன்களையோ வாங்கும்போது இலங்கை கைகட்டி வாய்பொத்தி நிற்க வேண்டியுள்ளது. ஏனெனில் அதற்கு பின்னால் குறித்த அணியை ஆட்சிபீடத்தில் வைத்திருப்பதில் இந்த நாடுகள் ஆதிக்கம் (நிதி- பிராந்திய ரீதியாக) செலுத்துகின்றன.

மாறாக, "உதவுகின்ற உங்கள் அக்கறையை வரவேற்கிறோம். இனி உங்களிடம் கடன் வாங்க நாங்கள் தயாராக இல்லை. வேண்டுமானல் முதலீடுகளைச் செய்யுங்கள். அதற்குரிய பொருளாதாரக் கட்டணங்கள எமக்குள் செலுத்துங்கள்" எனும் நிலைப்பாட்டை இலங்கையால் எடுக்க முடியமெனில் அதுவே இங்கு சாத்தியமான தீர்வாக இருக்க முடியும். இலங்கையின் பூகோள கேந்திர முக்கியத்துவம் இந்த நாடுகளுக்கு அவசியமெனில், அவர்கள் முதலீடுகளைச் செய்வார்கள். இப்படி அறிவிக்க உறுதியான தலைமைத்துவம் (Statesman) நாட்டுக்குத் தேவை. அத்தகைய முதலீடுகளின்போதும் இலங்கை தமது நிபந்தனைகளை விதிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

இலங்கையில் இந்திய எண்ணெய்க் கம்பனியை (IOC) யை முதலீடு செய்ய அனுமதித்து விட்டு பின்னர் அவர்கள் நினைத்த மாத்திரத்தில் விலையேற்றம் செய்யும் காட்சிகளையும் இப்போது பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இலங்கை எத்தகைய நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என்பதை இங்கே கற்றுக்கொள்ள வேண்டும். மலேஷியாவின் வளர்ச்சியோடு சமாந்திரமாக பக்கத்து நாடான சிங்கப்பூர் வளர்ச்சியடைந்ததுபோல, இந்தியா வளர்ச்சியடையும்போது இலங்கையும் வளர்ச்சியடைய வேண்டும் எனும் நிலைப்பாட்டை இலங்கை உறுதியாக எடுக்க வேண்டும். சீன, அமெரிக்க தூதுவர்கள் நல்லூர்க் கந்தனிடம் ஆசி பெறத்தான் வட மாகாணத்துக்கு வருகின்றார்கள் என்று மட்டுமே புரிந்துகொள்வோமாக இருந்தால் இலங்கையின் இறைமை குறித்து பேசுவதற்கே இலங்கையர்கள் தகுதியற்றவர்களாகிவிடுவோம்.

Authorised by C.Oakley, 54 Victoria St Carlton South, VIC 3053

# எதிர்வரும் தேர்தலில் முதலாளிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மக்கள் நலனை முன் நிறுத்துவோம்

**VICTORIAN SOCIALISTS**



தொழிற்சங்கவாதி மற்றும் தமிழ் ஏதிலிகள் கழக ஒருங்கிணைப்பாளர் அரன் மயில்வாகனம் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகிறார். தமிழ் இனப்படுகொலையில் இருந்து தப்பி ஆஸ்திரேலியாவிற்கு அகதியாக வந்த அரன் இன்று நமக்காகவும் ஒட்டுமொத்த சமூக மாற்றத்திற்காகவும் களத்தில் போராடுகிறார்.

# CEYLON EXPRESS

## MONEY TRANSFER

- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

# 'உங்கள் வாக்கு கணக்கில் எடுக்கப்படச்செய்வது எப்படியென்று உங்களுக்குத் தெரியுமா'?

## 'ஃபெடரல்' தேர்தல், மே 21 சனிக்கிழமை

**சரியாக வாக்களிப்பது எப்படி என்பதை நீங்கள் புரிந்துகொள்வது முக்கியம்.**

தேர்தல் தினத்தன்று இரண்டு வாக்குச் சீட்டுகளை நீங்கள் நிரப்ப வேண்டும்:


- **பச்சை நிறத்திலான பிரதிநிதிகள் சபைக்கான ஒன்று**
- **பெரிய வெள்ளை நிறத்திலான 'ஸெனட்'-டிற்குரிய ஒன்று**

பச்சை நிற வாக்குச் சீட்டில் பிரதிநிதிகள் சபைக்கான உங்கள் உள்ளூர் அல்லது தொகுதிப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

வெள்ளை நிற வாக்குச் சீட்டில் 'ஸெனட்' இற்கான உங்கள் மாநில அல்லது எல்லைப் பிரதேசப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.


**நீங்கள் ஏதும் தவறு செய்துவிட்டால் கவலைப்பட வேண்டியதில்லை. இன்னொரு வாக்குச் சீட்டை கேட்டுப் பெற்று மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கலாம்.**

**பச்சை நிற வாக்குச் சீட்டு** – உங்கள் விருப்பு ஒழுங்கு வரிசைப்படி **ஒவ்வொரு** பெட்டியிலும் இலக்கமிடவும்.




மாதிரி வாக்குச் சீட்டு

**வெள்ளை நிற வாக்குச் சீட்டு** – கோட்டிற்கு மேலே அல்லது கீழே வாக்களிக்கும் தெரிவினை நீங்கள் மேற்கொள்ளலாம்.




மாதிரி வாக்குச் சீட்டு

## 'ஒன்றில்'

**கோட்டிற்கு மேலே வாக்களித்தல்**
உங்கள் தெரிவின் ஒழுங்கு வரிசைப்படி, கட்சிகள் அல்லது குழுக்களுக்காக **குறைந்தது 6 பெட்டிகளிலேனும்** இலக்கமிடவும்.

## 'அல்லது'

**கோட்டிற்குக் கீழே வாக்களித்தல்**
**குறைந்தது 12 பெட்டிகளிலேனும்** உங்கள் தெரிவின் ஒழுங்கு வரிசைப்படி ஒவ்வொரு வேட்பாளருக்கும் நீங்கள் இலக்கமிட வேண்டும்.

**ஆஸ்திரேலியாவின் கட்டமைப்பிற்கு உங்கள் வாக்கு உதவும்.**
**aec.gov.au -இல் வாக்களிக்கப் பயிற்சி பெறுங்கள்.**

| மேலும் அறிய | aec.gov.au 1300 720 153 |
|---|---|

AEC Australian Electoral Commission

10 மோர்ட் தெரு, கான்பெரா -விலுள்ள தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது.
Authorised by the Electoral Commissioner, 10 Mort Street, Canberra

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI


PARLIAMENT OF AUSTRALIA

HOUSE OF REPRESENTATIVES

# CRAIG KELLY MP

**Federal Member for Hughes**
**Leader United Australia Party**

6th April 2022

My fellow Australians

**Liberal and Labor have given Australia one Trillion Dollars of debt ($1,000,000,000,000) (a million million)**

At the Government's proposed rate of repayment, it will take Australians 250 years to repay the debt.

A Trillion Dollars of debt will increase home loan rates to 4% in 2 years and to over 6% in 3 years.
At 4%, over 60% of Australians will default on their mortgages and will lose their homes, and at 6% or more over 80% of Australians will lose their homes.

The real estate market will then collapse and foreign buyers will flood our real estate market as they will have the money to buy up our properties.

We have to stop Australians from losing their homes!

**A maximum of 3% interest on Home Loans**

The United Australia Party will introduce a maximum interest rate for all home loans of 3% per annum for the next 5 years to save Australian homeownership.

My treasurer, Clive Palmer, has a wealth of business experience and the ability to save Australia. The Liberal and Labor finance teams just don't know what to do and they are keeping you in the dark.

**Repayment of National Debt**

Both Liberal and Labor fail to address the Trillion Dollars of National Debt, but not the United Australia Party.
We plan to address it head-on and save your family from its impact.

Australia supplies over 80% of all Iron Ore to the Asian manufacturing market, where tens of trillions of dollars are invested in manufacturing in China, Japan, Korea and the rest of Asia.

Asia achieves its position in world trade by using Australian Iron Ore. Asian economies and industry have no alternative.

In the 1960s, Australia had an export license on the export of Iron Ore. The United Australia Party will introduce a 15% export license on the export of all Australian Iron Ore. The export license receipts will be isolated for the sole purpose of repaying our National Debt which will relieve every Australian from that burden and set up our future. So Australia can be all it can be without the financial destruction the Labor and Liberal parties have imposed on our country.

**Bring Australian Super Home**

Australia has over One Trillion Dollars of Super invested overseas. Just like when John Curtin in World War 2 brought the troops back to save Australia, the United Australia Party will bring back a Trillion Dollars of Australian Super back to Australia, to save Australia.

To save your home and Australia, I need you to vote 1, for your United Australia Party candidate for your electorate, in the House of Representatives and for the United Australia Party Senate team.

We can save Australia and your home.

God bless Australia.

Craig Kelly

Craig Kelly
Leader United Australia Party

Authorised by: Craig Kelly, Parliament House, Parliament Drive, Canberra ACT 2600

UAP13469P4G


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# அதானி-நிலக்கரி-சூழல் சீர்கேடுகள்



● அ.முத்துக்கிருஷ்ணன்

உலகம் முழுவதும் புதைபடிவ எரிபொருள்களில் இருந்து நாம் விலக வேண்டும், வெளியேற வேண்டும் என்கிற கோரிக்கை எழுகிற நேரம் இந்தியாவின் அதானி குழுமம் ஆவுஸ்திரேலியாவில் நிலக்கரி வெட்டி எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக அறிவித்தது. இந்த திட்டம் அறிவித்தது முதலே கடுமையான எதிர்ப்பையும் உரையாடலையும் ஏற்படுத்தியது.

ஆஸ்திரேலியா உலகம் முழுவது நிலக்கரியை ஏற்றுமதி செய்வதில் முன்னணியில் திகழும் நாடு. ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாண்ட் மாநிலத்தின் கலீலி ஆற்றுப் பள்ளத்தாக்கின் கார்மிக்கேல் சுரங்கத்தில் அதானி குழுமம் நிலக்கரியை வெட்டி எடுக்கத் தீர்மானித்தது.

2010 இல் அதானி குழுமம் ஆஸ்திரேலிய அரசுடன் இந்த நிலக்கரித் திட்டத்துக் கு ஒப்பந்தம் செய்தது. வருடந்தோறும் 6 கோடி தொன் நிலக்கரியை வெட்டி எடுப்பது, அதற்கு 400 கி.மீ நீளம் தனித்த ரயில் தண்டவாளங்களை அமைப்பது என மொத்தம் 11 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்குத் திட்டத்தை வடிவமைத்தார்கள். 10,000 பேருக்கு வேலையளிக்கப்படும் என்கிற வாக்குறுதியுடன் களத்தில் இறங்கினார்கள்.

ஆனால் நாலாபுறமும் எழுந்த கடும் எதிர்ப்புகளால் ஏழு ஆண்டுகள் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முடியவில்லை. இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு வலுத்ததும் வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், தொழில்நுட்ப மற்றும் தளவாட நிறுவனங்கள் அனைத்துமே பின்வாங்கின.

இருப்பினும் இந்தச் சுரங்கத்தில் இருந்து வெட்டி எடுக்கப்படும் நிலக்கரிக்கு உலகம் முழுவதும் ஏற்கனவே 1 கோடி தொன் அளவுக்கு ஓர்டர்களைப் பெற்று விட்டதாகவும் அந்த நிறுவனம் அறிவித்திருந்தது. ‘நாங்கள் பின்வாங்கவில்லை’ என புறவாசல் வழியே இந்தத் திட்டத்தை எப்படியேனும் தொடங்குவது என்பதில் அதானி நிறுவனம் முனைப்போடு இருந்தது.

இந்தத் திட்டத்தால் சுற்றுச்சூழல் மாசுபடும், ஆஸ்திரேலியாவில் இருக்கும் The great barrier reef என்கிற உலகின் மிகப்பெரும் பவளப் பாறைகளின் தொகுப்புகள் அழியும் அபாயம் உள்ளது என்று இதனைத் தடுக்க ஏராளமான காரணங்கள் முன்வைக்கப்பட்டன. STOPADANI என்கிற போராட்டக் குழு உருவாக்கப்பட்டு அதில் சூழலியல் வாதிகள், பருவநிலை மாற்றம் தொடர்பான விஞ்ஞானிகள் என்று சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களில் இருந்து குழுக்கள் இணைக்கப்பட்டு ஆஸ்திரேலிய வரலாற்றிலேயே இதுவரை இல்லாதளவுக்கு எதிர்ப்புகள் வலுத்தன. எதிர்ப்பு வலுப்பெற்றதால், அதானி நிலக்கரி திட்டம் ஏழு ஆண்டுகள் தொடங்க முடியாமல் முடங்கிக் கிடந்தது.

அதானி திட்டத்துக்கு நிதி உதவி செய்வதாக இருந்த உலகின் பெரும் நிதி நிறுவனங்கள், வங்கிகள் இந்த திட்டத்தில் இருந்து விலகின. இப்படித் தொடர்ச்சியாக விலகல்கள் ஏற்பட்ட நிலையில் தான் இந்திய அரசு கொடுத்த அழுத்தத்தின் பெயரில் இந்தியாவின் பெரும் பொதுத்துறை வங்கியான ’ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியா’ இந்தத் திட்டத்துக்கு ரூ.6000 கோடி கடன் வழங்கி பெரும் சர்ச்சைக்குள்ளானது.

அதானி நிறுவனத்தின் கடந்த காலம் முழுவதும் சர்ச்சைகள் நிரம்பியது. வரி ஏய்ப்பு, மோசடிக் குற்றச்சாட்டுகள், சட்ட மீறல்கள், மனித உரிமை மீறல்கள், பத்திரிகையாளர்களை வேட்டையாடுதல் என அதானி நிறுவனத்தின் வரலாற்றையே ஆஸ்திரேலிய பத்திரிகையாளர்கள் தோண்டி எடுத்து பல இணையத்தளங்களில் அவற்றை பிரசுரித்தும், புத்தகமாக வெளியிட்டும் வருகிறார்கள். இந்தியாவில் அவர்களின் பல திட்டங்களுக்காக எப்படி சாமானியர்கள் மற்றும் பழங்குடிகளிடமிருந்து நிலத்தை அபகரித்திருக்கிறார்கள் என்பதில் தொடங்கி பர்மாவின் சர்வாதிகார அரசுடன் அதானி நிறுவனம் எப்படி கைகோர்த்து வேலை செய்கிறது என்பது வரை ஏராளமான விபரங்களைப் போராட்டக் குழுவினர் தொகுத்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு ஆஸியில் தேர்தலின் போது இந்த அதானி திட்டம் தேர்தல் பிரசாரங்களின் முக்கிய பாடுபொருளாக மாறியது. வேலைவாய்ப்பா அல்லது சூழல் பாதுகாப்பா என்கிற இரு முனைகளில் விவாதம் நடைபெற்றது. அதானியின் திட்டத்தை ஆதரித்த கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றதும் வேலைகளைத் தொடங்கினார்கள். அதானி குழுமம் ஒரு புதிய தந்திரத்தை கைக்கொண்டது, அவர்கள் ஆஸ்திரேலியாவில் உள்ள தங்களின் நிறுவனத்தின் பெயரை ’ப்ராவுஸ்’ என மாற்றிக் கொண்டார்கள்.

இந்த நிலக்கரியை ஆஸ்திரேலியாவில் இருந்து ஏற்றுமதி செய்ய 2011ஆம் ஆண்டு அபாட் பாயிண்ட் என்கிற ஒரு துறைமுகத்தை விலைக்கு வாங்கி, அந்தத் துறைமுகத்தின் பெயரை நோர்த் குயின்ஸ்லாண்ட் எக்ஸ்பேர்ட் டெர்மினல் (North Queensland Export Terminal) என மாற்றினார்கள்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் முத்ரா பகுதியில் இந்த நிலக்கரியில் இருந்து நெகிழி (PVC) தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்கப் போவதாக அதானி நிறுவனம் அறிவித்துள்ளது. இது உலகின் ஆகக்கொடிய சுற்றுசூழல் மாசை ஏற்படுத்தும் தொழிற்சாலையாக இருக்கும் என உலகம் முழுவதில் இருந்து கண்டனங்கள் எழுந்தவண்ணமுள்ளன. உலகமே நிலக்கரியில் இருந்தும், நெகிழியில் இருந்து விடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அசுர லாபம் ஒன்றே குறிக்கோளாக கொண்ட அதானி நிறுவனத்தின் இந்த திட்டம் உலகின் திசைவழியையே அவமதிக்கப்பதாக உள்ளது என்று சூழலியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் நெகிழியை விடவும் இந்த நிலக்கரி, மின்சாரத் தயாரிப்புக்குத் தான் பெரும்பாலும் பயண்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகம் முழுவதுமே நிலக்கரி மற்றும் பெற்றோலியப் பொருள்கள் எரிக்கபடுவதால் எழும் மாசுபாட்டில் பின்விளைவாகவே பருவ நிலை மாற்றம் ஏற்படுகிறது என்பது இன்று ஒரு பாலபாடம் போல் மாறியுள்ளது. புவியின் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க துருவங்களில் உள்ள பனிமலைகள் அதிவேகமாகக் கரைகின்றன, ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது, கடல் மட்டம் உயர்கிறது, உலகின் பல நகரங்கள், கிராமங்கள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் அறிகிறோம். இந்தோனேசியா தன் தலை நகரம் ஜகர்த்தாவையே இரண்டாயிரம் கிலோமீற்றருக்கு அப்பால் வடக்கே மாற்றுகிறது என்பதாக இன்று நாம் அபாயத்தைக் கண்கூடாகப் பார்க்கத் தொடங்கியிருக்கிறோம்.

ஆஸ்திரேலியாவிலும் அதானி நிறுவனம் ரயில் பாதைகள் அமைப்பதில் ஏழு முறை சூழலியல் மற்றும் வனவிலங்கு சட்டங்களை மீறியுள்ளது. ரயில் பாதைகள் அமைக்கும் போது வனவிலங்குகளை அவர்களின் வழிதடங்களில் இருந்து அப்புறப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியப் பூர்வகுடிகளான அபார்ஜின்களின் நிலத்தை, வாழ்விடத்தை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள், அவர்களின் நீர் ஆதாரங்களை அழித்திருக்கிறார்கள். அபாட் துறைமுகத்தில் அதானி நிறுவனத்தின் மனசாட்சியற்ற நடத்தைக்காக நீதிமன்றம் அந்தநிறுவனத்துக்கு 100 மில்லியன் டொலர் அபராதம் விதித்தது. கார்மிச்சேல் சுரங்கத்தில் இருந்து கடுமையான மாசுபாடு உள்ள கழிவு நீரை ’க்ரேட் பேரியர் ரீஃப்’ என்கிற உலகின் தொன்மையான பவளப்பாறைகளை சூழ்ந்துள்ள நீரில் கலக்கத்தொடங்கி விட்டார்கள். ஆஸ்திரேலியாவின் எழில்மிகு கடற்கரைகள் தமது பொலிவை இழக்கக் தொடங்கிவிட்டன.

இந்தியாவிலும் அதானி நிறுவனம் வளர்ச்சி என்கிற பெயரில் கண்மூடித்தனமாக ஏற்படுத்தியிருக்கும் அழிவுகள் பல. சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள அதானியில் நிலக்கரிச் சுரங்கத்தினால் அந்தப் பகுதி வனங்களில் வாழும் யானைகள், சிறுத்தைகள், கரடிகள் அவைகளின் பாதைகளை இழந்து அருகில் இருக்கும் கிராமங்கள், நகரங்கள் வரை திசைமாறி வந்துவிட்டன.

கோவாவிலும் அதானி அமைக்கும் நிலக்கரிக்கான தனித்த ரயில் பாதைகளினால் அங்குள்ள வனங்கள் அழிக்கப்பட்டு புலிகள், கருஞ்சிறுத்தைகள், காட்டெருமைகள் என்பவற்றுக்கு நேர்ந்த கதியை பல கட்டுரைகளில் வாசித்திருப்பீர்கள்.

சென்னையில் பழவேற்காடு பகுதியில் அதானியின் துறைமுக விரிவாக்கத்தில் ஏற்படவிருக்கும் சூழலியல், காட்டுயிர் மற்றும் அங்குள்ள மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை பற்றி தனியாகவே ஒரு கட்டுரை எழுதலாம், சென்னையில் தொடர்ந்து எதிர்ப்பியக்கங்கள் நடைபெற்று வருகின்றன.

உலகம் முழுவதிலும் நிலக்கரிப் பொருளாதாரம் என்கிற ஒன்றைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர அதானி குழுமம் முனைகிறது. குறிப்பாக அதானி குழுமம் இந்தியாவின் மின்சாரத் தயாரிப்பு, மின்விநியோகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர கடும் முயற்சி எடுத்து அதில் பெரும் வெற்றியையும் கண்டு வருகிறது.

ஒரு நிறுவனம் அளவு கடந்து வளரும் போது எந்தத் தேசத்தின் சட்டங்களும் தனக்கு பொருந்தாது என்பதில் அது தெளிவாக இருக்கும். தங்களுக்கு வேண்டிய சட்டங்களை உலகம் முழுவதும் இயற்றலாம் என்பதே அவர்களின் பலமாக உள்ளது. பெரு நிறுவனங்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களாக அரசுகள் மாறிவிட்ட பிறகு மனிதர்கள், இயற்கை எல்லாம் இரண்டாம் பட்சம் தானே.

# மனமே! காயமா?

**நேர்காணல் : நேகா**

ஆஸ்திரேலியாவில் மனஅழுத்ததினால் பாதிக்கப்படுவோரில் புலம்பெயர்ந்தவர்களே அதிகம். குறிப்பாக அகதிகளில் இளவயதினரின் சாவுகள் அதிகரித்துள்ள நிலையில் இத்தகைய மெல்லக்கொல்லும் மன அழுத்தம் குறித்து சிட்னிவாழ் பிரபல மன அழுத்த வைத்தியர் ரைஸ், ‘எதிரொலிக்காக’ வழங்கிய பிரத்தியேக செவ்வி இது.

**கேள்வி : புலம் பெயர்ந்தவர்களுக்கு பொதுவாக என்னென்ன வகையில் மனநலப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு?**

பதில்: புதிய இடம், புதிய மனிதர்கள், புதிய மொழி மற்றும் புதிய கலாசாரத்துக்குள் நுழைவதால் புலம் பெயர்ந்தவர்களுக்கு பொதுவாக மனஅழுத்தம், பதற்ற நோய், மனச்சிதைவு போன்ற மனநலச் சோர்வுகள் சராசரி மனிதர்களை விட அதிக சதவிகிதத்தில் ஏற்படுகிறது. ஆனால் உள்நாட்டுப் போர், பேரினவாத ஒடுக்குதல் மற்றும் தாய் மண்ணின் மீது வெளி நாட்டினரின் ஆக்கிரமிப்பு என பல காரணங்களால் அகதிகளாகி, பின் புலம் பெயர்ந்தவர்களுக்கு மேலே சொன்ன பாதிப்புகள் தவிர்ந்து, Post Traumatic Stress Disorder (PTSD) எனச் சொல்லக் கூடிய மனக்காய நோயும் ஏற்படுகிறது.

**கேள்வி : மனக்காயமா? அது ஏன் அப்படி? இந்த PTSD பற்றி கொஞ்சம் விரிவாக சொல்லுங்களேன் ?**

பதில் : அகதியாக வருபவர்கள் புலம் பெயர்வதற்கு முன்பு அனுபவிக்கும் எண்ணிலடங்கா போர் மற்றும் பேரினவாத அடக்குமுறை போன்ற இன்னல்களின் விளைவுகள், போரினால் அவர்கள் தங்களது வீடு சொத்து இழந்து மற்றும் சொந்த பந்தங்களையும் அப்படியே விட்டு விட்டு நிர்க்கதியாக வருதல், பல அகதிகள் தஞ்சம் புகுந்த நாட்டில் நீண்டகாலம் தடுப்பு முகாம்களில் கடுமையான சூழ்நிலையில் வைக்கப்படுதல், குடி புகுந்த நாட்டில் எளிதில் வேலை கிடைக்காமல் திண்டாடுதல், இனப்பாகுபாடால் புறக்கணிக்கப்படல், தற்ப்போதைய சூழ்நிலை காரண-மாக தான் பிறந்த நாட்டுக்கு எளிதில் பயணம் செய்யவோ இல்லை திரும்பிப்போக முடியாத நிலை போன்ற பல-காரணிகளால் இருப்பதாலும் இந்த மனக்காய நோய் அவர்களுக்கு அதிகமாக ஏற்படுகிறது.

**கேள்வி: மனக்காய நோயின் அறிகுறிகள் என்னென்ன?**

பதில்: மனஅழுத்தம் மற்றும் மனப்பதற்றம் என்பவற்றோடு அவர்களுக்கு சில பிரத்யேகமான அறிகுறிகளும் இருக்கலாம். ஏற்கனவே அனுபவித்த கொடுமைகள் விடாமல் கொடுங்கனவாக (nightmares) வருவதால் தூக்கம் பாதிக்கலாம், பழைய கொடுமையான சம்பவங்களின் ஞாபகம் (flash backs) திடீர் திடீரென ஏற்பட்டு அடிக்கடி மனப்பதற்றம் (panic attack) ஏற்படலாம், தன்னை சுற்றி ஏதாவது ஆபத்து நேரப் போகிறதோ எனும் பதற்றத்திலேயே எப்போதும் இருக்கலாம் (hyper vigilance) , தன்னைச் சுற்றி ஏதாவது சிறு சத்தம் கேட்டாலும் பதறும் நிலை இருக்கலாம் (startling response), போர், விமானம், துப்பாக்கிச் சூடு போன்ற செய்திகளை கேட்கவோ பார்க்கவே கடினமாக இருப்பதால் அவற்றைத் தவிர்ப்பர். இது போக அவர்களுக்கு மனஅழுத்தத்துக்குரிய மற்ற அறிகுறிகளும் சேர்ந்தே இருக்கலாம். இதனால் சிலர் தங்களது துன்பங்களுக்கு வடிகாலாக போதை மற்றும் சூதாட்டாத்துக்கும் அடிமையாகின்றனர்.

எனக்குத் தெரிந்த இலங்கையிலிருந்து அகதியாக வந்து குடிபெயர்ந்த ஒருவர் எப்பொழுதெல்லாம் தனது வீட்டின் மேல் பகுதியில் விமானம் பறக்கிறதோ அப்பொழுதெல்லாம் ‘செல் அடிக்கிறாங்கள்’ எனச் சொல்லிக் கொண்டே பதறி பயந்தடித்துக் கொண்டு தனது வீட்டின் மேசையின் கீழ் போய் ஒளிந்துக் கொள்வார்.

இதில் துயரமான விடயம் என்றவென்றால் போர் அகதிகளாக வந்த பல பேர் இந்நாட்டில் முறையான விசா கிடைக்காததால் பெரும் அவதியுறுகின்றனர். அவர்களில் சிலர் இந்த மனப் போராட்டத்தில் மனமுடைந்து தற்கொலை செய்தும் கொள்கின்றனர்.

அது போல அவர்களின் பொது உடல் நலனும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கின்றது. இவ்வருட முதல் கால் பகுதியில் மட்டும் குறைந்தது பத்து இலங்கை அகதிகள் திடீரென உடல் நல குறைவால் இறந்துள்ளனர். அவர்கள் அனைவரும் நாற்பது வயதுக்குட்பட்டவர்கள் என்பது அதிர்ச்சியான தகவல்.

**கேள்வி: இதற்கு தீர்வு உண்டா ?**

பதில்: ஆம் நிச்சயமாக இருக்கிறது. பொதுவாக பதற்ற நோய்க்குரிய மருந்தும், கொடுங்கனவுக்கான பிரத்யேக மருந்து என்பவற்றைத் தவிர , மனக்காயத்துக்கென பிரத்யேகமான மனநல ஆலோசனைத் தேவைப்படும். இது போக Eye Movement Desensitization and Reprocessing (EMDR) எனும் ஒரு வகை மனநல ஆலோசனையும் சில பேருக்கு தேவைப்படலாம். மனக்காயம் ஏற்பட்டவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும் போது மனக்காயம் ஏற்படுத்திய சம்பவங்கள் பற்றி விவாதிப்பது உண்டு. ஆனால் அவற்றைப் பற்றிய ஞாபகங்கள் ஆழ்மனதில் அமுக்கப்பட்டுக் கிடப்பதால் அவைப்பற்றிய விபரங்கள் அவர்களுக்கு எளிதில் வெளி மனதுக்கு வராது. அந்த சம்பவங்களின் ஞாபகத்தை தூண்டி அதை அலசி காயத்துக்கு தீர்வு காண்பது தான் இந்த EMDR எனுப்படும் சிகிச்சையின் சாராம்சம். இங்கு




N(SERVICE FOR THE TREATMENT AND REHABILITATION OF TORTURE AND TRAUMA SURVIVORS) மனக்காயம் பட்ட அகதிகளுக்கு இலவசமாக மனநல ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கிறது. ■

MONEYQUEST
FINANCE SPECIALISTS

Money Quest Endeavour Hills is here to help you!

No matter what type of property you're looking for, the professional team at MoneyQuest Endeavour Hills can help you find the right home loan.

As loan experts, you can rely on MoneyQuest Endeavour Hills to have your best interests at heart. With experience and integrity, we guide you towards products that suit your needs.

We can help with:

- Home Loans
- Refinance Loans
- Investment Loans
- Construction Loans
- Car and Vehicle Loans
- Debt Consolidation



Nathan Sivakanthan

உங்கள் தேவைகள் குறித்து தமிழில் உரையாட தொடர்பு கொள்ளுங்கள்

Call us on 0404 053 746 or email
nathan.sivakanthan@moneyquest.com.au

Sivayoganathan Sivakanthan is a Credit Representative (No. 535478) of Money Quest Australia Pty Ltd, Australian Credit Licence 487823.

Visit our website!






எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற உள்ள ஆஸ்திரேலிய பொதுத் தேர்தல் தொடர்பான அரசியல் கட்சிகளின்வேட்பாளர்கள்,தமிழ் சமூக பிரதிநிதிகளையும் மக்களையும் சந்தித்து வரும் நிகழ்வுகள் பரவலாக நடைபெற்றுவருகின்றன.

இதன் தொடர்ச்சியாக கடந்த இரண்டாம் திகதி சிட்னியில் Parramatta தொகுதியின் தொழிற்கட்சிவேட்பாளராக போட்டியிடுகின்ற Dr Andrew Chalton அவர்கள் உடன் ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் ஆகிய Kevin Rudd அவர்களும் இணைந்து தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது தமிழ்ச் சமூகத்தின் சார்பில் ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தற்காலிக வதிவிட விசாபெற்று உள்ளவர்களை நிரந்தரமாக தங்குவதற்கு வழிமுறைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும், இலங்கையின் தமிழர் தாயகப் பகுதிகளில் நமது மக்கள் சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் சம உரிமைபெற்று வாழத்தக்க அரசியல் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் அழுத்தம்கொடுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டது. அத்தோடு போரினால் பாதிக்கப்பட்டு ஆஸ்திரேலியாவில்குடியேறிய எமது மக்களின் பொருளாதார சமூக மனநிலை குறித்த மேம்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றகோரிக்கையும் விடுக்கப்பட்டது.

இவற்றை அக்கறையுடன் செவிமடுத்த முன்னாள் பிரதமர் கெவின் ரட் பாராளுமன்ற தொகுதி வேட்பாளர்அன்புடனும் இதுகுறித்து தங்களால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாக உறுதி அளித்தனர். அத்தோடு தமிழர் பிரச்சனை தொடர்பாக தமக்கும் எதிர்க் கட்சிக்கும் உள்ள வேறு-பாடுகளை தமிழ்ச்சமூகம்உன்னிப்பாக உற்றுநோக்கி தேர்தலில் வாக்குரிமை செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இதேவேளை தொழிற்கட்சி வேட்பாளர்கள் மற்றும் லிபரல் கட்சி வேட்பாளர்கள் ஊடான சந்திப்புகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.













வருடாந்தம் நியூ சவுத் வேல்ஸ் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பினால் நடத்தப்படும் ANZAC ஞாபகார்த்த நினைவு நிகழ்ச்சி கடந்த மாதம் 25ஆம் திகதி சிட்னியில் உணர்வுபூர்வமாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்வின்போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் தற்போதைய நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் ஆஸ்திரேலிய பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் ஆக பலர் கலந்து கொண்டு தமது வணக்கத்தை செலுத்தினார்கள்.

தமிழ் மக்கள் சார்பாகவும் ANZAC வீரர்களின் நினைவு கவிதை மற்றும் ஆஸ்திரேலிய தேசிய கீதம் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வின் போது சிறப்புரை ஆற்றிய நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்ற உறுப்பினர்,0 ஈழத்தமிழர்கள் போரில் தமது இன்னுயிர் ஈந்த மாவீரர்களை நினைவு கூருவதை போல் ஆஸ்ட்ரேலிய நாடும் முதலாம் உலக யுத்தத்திலும் பின்னர் நடந்த யுத்தங்களிலும் கொல்லப்பட்ட வீரர்களின் நினைவு சுமந்து ANZAC தினம் கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். இதை அடுத்து நிகழ்வுக்கு வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் ANZAC மலர்வளையம் வைத்து தமது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்கள்.

இறுதியில் தமிழ் தம் பாரம்பரிய உணவு பரிமாறப்பட்டு இந்நினைவு நிகழ்வு உணர்வுபூர்வமாக முற்றுப் பெற்றது.



ஊழிக்காலம்-2
32



# புயலுக்குப்பின்...

காட்டுள் அமைந்த அந்த அலுவலகத்தின் முற்றத்தில் இரண்டு பிரிவுகளில், தனித்தனி ‘லைனாக’ அமர்ந்தனர். பார்வதி தனக்குரிய வரிசைப்படி கடைசி ’லைனில்’ இருந்தாள். பேசுவதற்காக வந்த பொறுப்பதிகாரி மேஜர், ’பீ புளொக்கின்’ அணியை பார்த்ததும் “எங்க ரெண்டு பேர காணல்லயோகா?” என்று அதட்டினார். அவள் அலங்க மலங்க விழித்தாள்.

“போய் கூட்டிற்று வாங்க ”என ஒரு பிள்ளையிடம் சொன்னவர், தன் உரையை நிறுத்திவிட்டு, ”அது வரைக்கும் மற்றாக்கள் தியானம் செய்யுங்க” என்று கூறிவிட்டு உள்ளே போனார். பார்வதியும் தியானத்தில் ஆழ்ந்தாள்.

குறைந்திருந்த ரெண்டு பேருக்குப் பதிலாக வேறு இருவரைக் கொண்டு வந்து அமர்த்தினார்கள். பொறுப்பதிகாரி பேச ஆரம்பித்தார். சரோஜா அதை மொழிபெயர்த்தாள். முகாம்களின் ஒழுங்குகள் நடைமுறைகள் பற்றி பேசினார்.

“இன்று முதல் முகாம்கள் ஒன்று, இரண்டு என அழைக்கப்படும். ஆத்மார்த்தமாக போராளிகளாக இருந்த பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு போர்க்குணம் மாறவில்லை. காரணம் குழாயடியில் சண்டை. அற்ப பொருட்களையும் பங்கிட விருப்பமில்லை. ஒருவரையொருவர் மாட்டிவிட முயற்சி செய்வது, உங்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட தியான வகுப்புகளில் கலந்து கொள்வதில்லை” இப்படி பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போனார்.

எல்லாம் நியாயமான காரணங்களே. ”உங்களை இயல்புக்கு கொண்டு வர, விளையாட, கலை நிகழ்ச்சி செய்யச் சொல்லியும் அதில கொஞ்சம்பேர்தான் எப்பவும் வாறது. மற்றவர்களுக்கு என்ன வீட்டபோக விருப்பமில்லையா?”

“எதிர்காலத்தில சமுதாயத்தில சென்று வாழப்போகும் பெண்கள் நீங்கள். உங்களில் பலர் அணியும் ஆடைகள் உங்கள் உடலை மறைக்கப் போதுமானவையல்ல. பெண்கள் மட்டுமரியாதையாக இருக்க வேண்டும். குசினியில் வேலை செய்யும் பெண்கள் சட்டைக்கு மேலாக எதையாவது கட்டிக் கொள்ளுங்கள். பின்னுக்கு ரோட்டுக்கு காட்டிக் கொண்டு பாத்திரம் கழுவுறீங்க , படியுங்க, பகலில விழுந்து படுக்காதைங்க, பிள்ளைகளையும் படுக்க அனுமதிக்காதையுங்க” என்று தன் பேச்சை முடிவுக்கு கொண்டு வந்த பின் முதலாம் பிரிவுக்கு புதிதாக ஒரு தலைவியைத் தெரிவு செய்ய சொன்னார். பின் தானே ஆறாம் அணித்தலைவியான ரஞ்சனியை தெரிவும் செய்தார். இப்போது அவர் இன்னொரு கதையை சொன்னார்.

“உங்கட இயக்கத்தில அதிகாரம் பண்ணினவங்க இங்கயும் அப்பிடி வர நான் இடம்தர மாட்டன். அந்த அதிகாரங்களை விடுங்க.”

ரஞ்சனியின் அணிக்கு வேறு தலைவியைப் போட்டார்கள். அதன்பின்,

“கவனமாக் கேளுங்க, ஒவ்வொரு பிள்ளையும் தன் பிரச்சினைய அணித்தலைவியிட்டதான் சொல்லலாம். நேரா இங்க வர முடியாது. அணித்தலைவிகள் தங்கட பிரச்சினைய பொதுத் தலைவியிட்டதான் சொல்லலாம். அவங்களும் நேரா இங்க வர ஏலாது. பொது தலைவியா இரண்டு பகுதிக்கும் உள்ள ஆள் அம்மா. பார்வதி அம்மா ரெண்டு பகுதிக்கும் பாப்பாங்க. பிரச்சினையெண்டா அம்மா மட்டுந்தான் ஒப்பிசுக்கு வரலாம் சரியா? உங்கட பிரச்சினை எதுவும் அம்மாகிட்ட சொல்லுங்க” என்றவர் பார்வதியிடம் திரும்பி,

“அம்மா நீங்க ரெண்டாம் பகுதியில போய் இருங்க. அங்க ரொம்ப கெட்டுப் போச்சம்மா” என்றார். “சரி ஏதாவது சொல்ல இருக்கா - இலலையென்றால் போங்க” என்றார் அனைவரும் கலைந்து சென்றனர்.

உண்மையில் நேற்று நடந்த சம்பவத்துக் குப்பின் பார்வதி இந்த முகாமில் இருக்க விரும்பவுமில்லை. இரண்டாம் பகுதியில் பிள்ளைகளும் ஒழுங்கைத் தவறவிட்டிருந்தார்கள் .எனவே பார்வதியை அங்கே மாற்றப் போவதாக ஏற்கெனவே சொல்லியிருந்தாலும் இப்போது இரண்டு பகுதிகளிலுமே பார்வதிக்கான வேலையை போட்டு பார்வதியை இரண்டாம் பிரிவில் தங்கவைத்ததும் அவளுக்கு மகிழ்ச்சியே.

பார்வதி விடுதலையாகிப்போன ஒரு பிள்ளையின் இடத்தில் தங்கினாள். அங்கே அவளுடன் உதயா, கானகி, பிரபா ஆகியோர் தங்கியிருந்தனர். மாறி மாறி விரதம் பிடிப்போர் என்பதால் தி-னசரி தனிச்சமையல். குசினியிலிருந்து பெறக்கூடிய மரக்கறிகளைப் பெற்று சமைத்துண்டனர்.



பார்வதி பிரச்சினைகள் தன்னைத் தொடராதிருக்க இறைவனைப் பிரார்த்தித்தாள். ஆனால் என்ன செய்வது இறைவனுக்கும் எல்லோருடைய பிரச்சினைகளையும் தீர்த்துவைக்க நேரம் போதவில்லையோ என்னவோ, அவை தம்பாட்டுக்கு வந்து போய்க்கொண்டிருந்தன.

மறுபடி போராளிகளின் விபரங்களைச் சேகரிக்கத் தொடங்கினார்கள். திருமண-மானோர் ஆகாதோர், இயக்கத்தில் இணைந்த காலம் விலகிய காலம், இருந்த பிரிவு, பிறந்த மாவட்டம் ,வாழ்ந்த மாவட்டம், பிரதேச செயலர்பிரிவு, கிராமசேவையாளர் பிரிவு என ஏராள-மான கேள்விகள் . பதிவு செய்துவிட்டு வந்த பிள்ளைகளும் மற்றவர்களும் பேசிக் கொண்டதாவது.

“ என்னவாமடி கேக்கிறாங்கள்?”

“நாங்கள் வந்தபிறகு எடுக்கிற தொளாயிரத்து தொண்ணூத்தொன்பதாவது விவரக் கொத்து, இன்னுமொண்டு எடுத்தாங்களெண்டா ஆயிரமாம். அதோட பிரச்சினை முடிஞ்சிரும். விட்டிருவாங்களாம்.”

பார்வதிக்கு இப்போது போதியளவு நேரம் கிடைத்தது. அவள் எழு-தவும் வாசிக்கவும் தொடங்கினாள். அவ்வப்போது வரும் பார்வையாளர்கள், மாத சஞ்சிககைகளைப் பிள்ளைகளுக்கு கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை-தவிட எப்போதாவது தினகரன் பேப்பர்கள் பல நாட்கள் வந்தவை ஒரே நாளில் வந்து விழும். என்றாலும் அவற்றில் அவர்கள் அறியாத சமுதாயத்தில் நடப்பவைகளைப் படிக்க முடியும். எழுதி எழுதி குறையில் கிடந்தவற்றை வாசித்துப்பார்த்து, அவற்றை மீண்டும் தொடர்ந்து எழுத ஆரம்பித்தாள்.

மறுநாள் கைகால் இழந்தவர்கள், படுகாயமடைந்தவர்களின் விபரங்கள் எடுத்தார்கள் ‘அவசரம் அவசரம்’ என்று அலுவலகத்துக்கே அழைத்து எடுத்தார்கள்.

அடுத்த நாள் பார்வதி எழுதிக்கொண்டிருந்தபோது, வதனி வந்து ,

“மம்மீ” உங்களை ஒருக்கா ஒப்பிசுக்கு வரட்டாம்.” என்றாள் பார்வதி எல்லாவற்றையும்எடுத்துவைத்துவிட்டுஅலுவலகத்துக்குச் சென்றாள். பொறுப்பதிகாரி விடுப்பில் சென்றிருந்தார். அவருக்கு அடுத்த நிலையில் இருந்த கப்டன் தர அதிகாரியே இப்பொழுது பொறுப்பாக இருந்தார். சற்று வயதாளியான அவர், நல்ல குணமுடை-யவர். கொஞ்சம் குள்ளமான தோற்றம், நல்ல நிறம்.புன்னகை தவழும் அழகிய முகம் அவருக்கு. அவர் அமைதியானவர் எனக் கூற முடியாது. ஏனெனில் அவருக்கு கீழுள்ள இராணுவத்தினரை கடுமையாக ஏசுவதையும் தண்டனை கொடுப்பதையும் பலமுறை பலர் கண்டுள்ளனர்.

பார்வதி அலுவலகத்தில் நுழையும் வரை இவர்தான் அழைத்தார் என்பதை அறியவில்லை . அவள் உள்ளே வந்தபோது, “வாங்கம்மா” என்று வரவேற்றது அவர்தான்.

“அம்மா நான் சிங்களத்தில் சொல்வதை உங்களால புரிந்து கொள்ள முடியுமா? ”என்று கேட்டார்.

“ஓம். சொல்லுங்க” என்றாள் பார்வதி.

“அம்மா இந்த ரெண்டு புளொக்கிலுமுள்ள பிள்ளைகள் வயசிலும், அனுபவத்திலும் கொஞ்சம்தான். அவங்களுக்கு பேசத் தெரியாது. ஆனா பாவமம்மா நாங்கள், உங்களைக் கூப்பிட்டு அதைச்செய் இதைச்செய் என்று சொல்ல ஏலாது. அது மரியாதை இல்லை. உங்களைப்பற்றி மற்றவை கதைக்கிறதும் சரியில்லை. உங்களைத் தேடிவந்து சொல்லாதவரை நீங்க எதுவும் செய்ய வேண்டாம். நீங்க அமைதியா இருந்து தியானம் வழிபாடு செய்யுங்க, சாப்பாடு தண்ணி குளிப்பு எல்லாம் இருக்கிற இடத்துக்கு தரச் சொல்லுறன். எந்தப் பிள்ளையோடயும் தொடர்பு வைக்கவேணாம். அமைதியா இருங்க . எனக்கு உங்களில நல்ல மரிய-ாதை இருக்கு. அதனாலதான் உங்களிட்ட வேலை சொல்ல விருப்பமில்லை. நாங்க மற்ற ஆக்களை வச்சு செய்யுறம்.”

“ ஓ! நல்லது எனக்கு மகிழ்ச்சிதான் “ என்ற பார்வதி திரும்பவும் முகாமுக்குத் திரும்பி, தனது வேலையை தொடர்ந்தாள். தனது மகனுக்கும் பேரர்களுக்கும் கடிதம் எழுத பேனா எடுத்தாளாயினும் அது கதையாக விரிந்தது. அவளைப் பார்ப்பதற்கு அவளுடைய கடைசித்தங்கையும் கண-வனும் வந்தார்கள். இப்போது சந்திப்புக் கொட்டிலில் பார்வையாளர்கள் உணவு விடுதிகளில் இருப்பது போல உட்கார்ந்து பேசக்கூடியதாக மேசை ,கதிரை போல ஆசனங்கள் அடிக்கப்பட்டிருந்தன. புட்டும் யப்பான்மீன் பொரியலும் கறியும் கொண்டு வந்திருந்தார்கள். ஊர்ப்புதினங்களை பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார்கள். பார்வதிக்கு தான் இருக்கும் உலகமே தனியானதாக இருந்தது.

அன்று மாலை தொலைக்காட்சி போடப்படவில்லை. ஊனமுற்றவர்களைப் பதிவு செய்தார்களல்லவா? அவர்களுக்கு நாளை விடுதலை என அறிவிக்கப்பட்டதால் அவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டு விட்டனர். பம்பமடுவில் வைத்து அவர்களை விடுவிக்கும் விழா நடை பெறும் எனத் தெரிந்தது.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் நூற்றுத் தொண்ணூறு பேருக்குமேல் கொண்டு செல்லப்பட்டு விட்டனர். இதனால் பல குடில்களில் ஆட்கள் குறைந்தும் சிலவற்றில் அறவே யாரும் இல்லாமலும் போயின. பின்புறம் காடாகவே இருந்ததாலும், அங்கே ஆண் இராணுவத்தினரின் காவலரண்கள் இருப்பதாலும், தனியாக இருப்பவர்களை முன்புறம் உள்ள குடில்களுக்கு மாறச் சொன்னாள் ரஞ்சனி. ஒருவர் இருவராக இல்லாமல் வழமைபோல நால்வராகவே தங்கச் சொன்னாள்.’அப்படியும் வெற்றுக்குடில்களுக்குள் யாராவது வந்தால்.?’என்ற பயமும் இருந்தது. எனவே ரீவி பார்ப்பதை விட்டுவிட்டு இந்த வீட்டு ஒழுங்குகளை கவனித்தனர். அது அவர்கள் பாதுகாப்புக்கான ஒழுங்கேயாகும்.

இதைவிட இன்னுமொரு பிரச்சினை இருந்தது. இங்கே பெண்கள் சிலரிடை-யே ஓரினச் சேர்க்கை உறவு இருந்தது. என்னதான் உலகம் நாகரிகத்தின் உச்சியில் இருந்தாலும், பெண்களிடையே இருக்கும் இந்த உறவு சகஜமானதுதான் என்று ஏற்றுக் கொள்ளும் பக்குவம் எம்மிடையே இல்லை. முன்னர் விடுபட்டுப் பூஸாவுக்கு சென்றவர்களுள்ளேயும் இப்போது சென்ற ஊனமுற்றவர்களிடையேயும், இது போன்ற லெஸ்பியன் சோடிகள் பிரிந்து விட்டன.

குளிப்பதிலிருந்து, உணவை ஒருவருக்கொருவர் ஊட்டி உண்பது, உடையணிவது, படம்பார்ப்பது ஒருவை-ரயொருவர் பராமரிப்பது, ஒரே பாயில் அணைத்தபடி தூங்குவது என இவர்களது நடவடிக்கைகளை பலர் விமர்சிப்பதுண்டு.

பெண்கள் ஒருவரையொருவர் அலங்கரித்துப் பார்ப்பதுண்டு. ஒருநாள் பார்வதி தனது குடிலில் படுத்திருந்தாள். மழைபெய்து ஓய்ந்திருந்த இரவு. நிலவு காய்ந்தது.அவளெதிரே முற்றத்தில் ஒரு பெண் பாய்விரித்துப் படுத்திருந்தாள். இன்னுமொரு பெண் தற்செயலாக அவ்விடத்துக்கு வந்தாள். வந்தவள் படுத்திருந்த பெண்ணின் கால்களை வைத்தகண் வாங்காமல் பார்த்தாள். அவள் அரைப்பாவாடை அணிந்து படுத்திருந்தாள். அவள் அப்படியே கிடந்தாள். வந்தவள் குனிந்து அவள் கால்களை தன் இரு கைகளாலும் அணைத்து குதிக்காலிலிருந்து மேல்நோக்கி வருடிக்கொண்டே போனாள். அரைப் பாவாடையுடன் படுத்திருந்த அந்தப்பெண் அப்படியே கிடந்தாள். கெண்டைக்கால்கள் முழங்கால்கள் எனக்கடந்து பாவாடையுள் நகர்ந்து தொடைவரை அந்தக் கைகள் நகர்ந்தன. படுத்திருந்த பெண்ணோ அவளைத் தடுக்கவில்லை. கைகளால் தன் முகத்தைப் பொத்திக் கொண்டாள். அதில் நாணம் மட்டுமல்ல அவளின் செய்கைக்கான அங்கீகாரமும் இருந்தது. தொடைவரை கைகளைக் கொண்டு சென்ற பெண்ணோ ‘க்ளுக்’கெனச் சிரித்துவிட்டு படுத்திருந்தவளை அணைத்து முத்தமிட்டாள்.

பார்வதிக்கு அவர்கள்மீது இரக்கமே ஏற்பட்டது. தமது பருவ வயதில் இங்கே அடைபட்டுக் கிடந்தாலும், உணர்வுகளுக்கு வடிகாலின்றி இருக்கும்போது இப்படி நடப்பது இரு பாலாரிடமும் ஏற்படுவதுதானே..

ஆனால் இயக்கத்திலும் இது போன்ற நடவடிக்கைகள் இருந்தாலும், அது வன்மையாக கண்டிக்கப்பட்டும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு, அடக்கப்பட்டது. இதனால் சயனைட் அருந்தி தற்கொலை செய்தவர்கள் என ஒருபட்டியலே உண்டு. அவர்களது உடல் சீருடை களையப்பட்டு வீடுகளுக்கு சாதாரணமான உடலாகச் சென்றன. இங்கும் அந்த லீடர்களே இப்போது தலைவிகளாக உள்ளதால்..அது பெரிய பிரச்சினையாகத்தான் பார்க்கப்பட்டது.

(இன்னும் வரும்)


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transcso™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU